சிவமயம்

குமர குருபரன்



த. 3112

மலர் 24] 1973-௵ கார்த்திகை மீ 1-ம௳ (16-11-73) [இதழ்

தனிப்பிரதி 25 பைசா வருடச் சந்தா ரூ. 3-00

ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்
காசிச் சர்வகலாசாலை, காசி.

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B. O. L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் (J. P.)
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்டண்டு கமிஷனர். சென்னை-85

5. திரு. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	திருவுந்தியார்-உரை விளக்கம் ...	509
2.	மாறட்டான் குன்றம் உடைத்து ...	513
3.	ஆலய நிர்வாகிகளே! அசந்து விடாதீர்கள்! ...	518
4.	அருள்மொழி அமுது ...	525
5.	கி. வா. ஜகந்நாதன் கவிதை ...	531
6.	இறையருள் பெற பன்னசை புராணம் ...	532
7	பன்னிரு கைகளின் பயன்! ...	536
8.	உமையாள் பயந்த இலஞ்சியம்	538
9,	தலை எழுத்து ...	543
10.	குமரா, முருகா, குகா! ...	546
11.	வாதவூர் அடிகள் உழைக்காது வேண்டும் ஊதியம் ...	549
12.	இராமேசுவரத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் நினைவுநாள் ...	552
13.	திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் நித்திய மகேசுவர பூசை உதவி நிதி ரூ 10,000	554
14.	மூன்றாம் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை	86

T-UN-437

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அறிவிப்பு

''மன்றுளே திருக்கூத் தாடி அடியவர் மனைகள் தோறும்
சென்றவர் நிலைமை காட்டும் தேவர்கள் தேவர் தாமும்
வென்றஐம் புலனுல் மிக்கீர்? விருப்புடன் இருக்க நம்பால்
என்றும்இவ் இளமை நீங்கா தென்றெழுந் தருளினுரே''

நாள்தாள்களில் வந்துள்ள செய்தியைக்கண்டும் கேட்டும் நம் அன்பர்களிற் சிலர் நேரிலும் தபாலிலும் அனுதாபச் செய்தி கூறியும் அனுப்பியும் வருகிறுர்கள்; பலர் மிகவும் கலங்குவதாகவும் திருவருளிடத்து நம்பிக்கைகுறைவதாகவும் காண்கிறோம். அது சரியன்று ''வேண்டத்தக்கது அறிவோய் நீ'' என்ற திருவாசகத்தை நினைவு கூர்வார்களாக. எல்லாம் நன்மைக்கே. நம்மிடம் அன்பும் பற்றும் அநுதாபமும் உடைய அன்பர்கள் யாவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்துக்கண்ட வண்ணம், தாமொன்றும் மனந்தளராத் தகுதியராய் உலகத் துக்கு ஆம் என்று இறைவன் திருவடியைச் சரண் புகுந்தால், இறைவன் அவர் தமைக்காக்கும் கருணையினுன் ஆகுவன். ''ஐயகோ'' என்று அரற்றுவதினும் ''ஐபனே அரனே என்று அரற்றினுல் உய்யலாம் உலகத்தவர் பேணுவர்''. இறைவன் நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்; எனினும் நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார். இடுக்கண் வரும்பொழுது மனம் தளர்தல் கூடாது. வள்ளுவரும் ''இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வ தஃதொப்ப தில்'' என்று கூறியுள்ளார்.

''ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்ருண்மைக்கு
ஆழி யெனப்படு வார்'' என்பது வள்ளுவர் வாய் மொழி.

ஆகவே துணிவே துணையாகக்கொள்ளல் வேண்டும். தீயவை தீயினும் அஞ்சப்படும். அஞ்சத்தக்கவற்றுக்குத்தான் அஞ்சுதல் வேண்டும். திருநாவுக்கரசர் மறுமாற்றத்திருத் தாண்டகத்தில் அருளிய வண்ணம்,

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை

தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே''

என்று வாழ்தலே நமது கடமை.

''தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே''.

இனி நான் மேற்கொள்ள வேண்டிய கடமைகளைச் செய்ய இருக்கிறேன். துணிவே துணையாகக் கொண்டு அன்பர்கள் செயல்பட வேண்டும். இறைவனின் சோதனை பொன்னைச் சுடுவது போன்றது; சங்கைச்சுடுவது போன்றதும் ஆகும். சுடச்சுடப் பொன் மிளிரும்; சங்கு வெண்மை மிகும். ஆகவே தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்து வருதலே தக்கது. அன்பர்கள் தம் ஆன்ம லாபத்தின் பொருட்டு நெடுங்களத் திருப்பதிகத்தையும், கோளறு திருப்பதிகத்தையும் நித்தலும் நியமமாய் ஓதுதல் நலம் தரும். ஷை பதிகங்கள் வேண்டுவோர் தம் முகவரியுடன் எழுதினால் அவ்விரு பதிகங்களும் அனுப்பி வைக்கப்பெறும்.

''பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்
வரவரக்கண் டாராய் மனமே—ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றுதே
ஏங்கி இளையா திரு''. —சிவபோகசாரம்.

வாழ்கசீரடியா ரெல்லாம்!
வாழ்க உலகெலாம்!

சிவ சிவ

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 24 | பிரமாதீச ஹு கார்த்திகை மீ 1உ [16-11-73] | இதழ் 11

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாய்வே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனர்

அருளிய

திருவுந்தியார் — உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி
திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்
நாதனும் ஆனனென் றுந்தீபற
நம்மையே ஆண்டானென் றுந்தீபற. (5)

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாத சுத்த சிவமான ஒரு பொருளாகியும், உயிர்களுக்கு அருள் புரியும் பொருட்டு உலகுயிர்களுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று பல வாகியும் ஆனவன், ஐந்தொழில்களைச் செய்யும் நிமித்தமாகப் பசு பதியாகவும் ஆனான். புறத்தே ஞானாசிரியனாக எழுந்தருளி வந்து நம்மையே ஆண்டு கொண்டான்.

“ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க” என்பது திரு வாசகம். சொரூப நிலையில் உருவம் ஒன்றும் இல்லாதது சுத்த சிவம். அதுவே தடத்த நிலையில் அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூவகை வடிவங்களைக் கொள்ளும். இதனைத் திருவருட் பயன் “அறிஞர்க்கு அறிவாம் உருவம் உடையான், அருவும் உருவும் உளன்” என்று குறிப்பிடுகின்றது. சொரூப நிலையில் ஒரு பொருளாயுள்ள சுத்த சிவம், தடத்த நிலையில் தன்னிட மிருந்து வெளிப்பட்ட பரையுடன் தொடர்பு கொண்டு பர சிவம் முதலிய திருப்பெயர்களுடன் பலவாகி நின்றருளும். அங்ஙனம் நின்றருளுவது, ஆன்மாக்களை உய்யக் கொள் வதற்கேயாகும். ஆன்மாக்களின் உய்தி, அவைகளுக்கு நிகழும் ஐந்தொழில்களை அடிப்படையாகக் கொண்டது. பசுக் களாகிய உயிர்களைப் பஞ்ச கிருத்தியத்தால் உய்யக் கொள்ளு கின்ற பரமசிவன், “பசுபதி” என்று வேத சிவாகமங்களில் துதிக்கப் பெறுகின்றார். படைத்தல் முதலிய ஐந்தொழில்களில் ஒவ்வொன்றை மட்டுமே செய்யும் பிரமன், திருமால் முதலி யவர்களும் பசுவர்க்கத்தினரேயாவர். அவர்கள் அனைவரையும் அவ்வத் தொழில்களைச் செய்யுமாறு நியமித்து, அவ்வெல்லாக் கடவுளரும் தாமாகவே இருந்தருளும் சிவபெருமான் ஒருவரே பசுபதியாவர். அவரே நமது கன்மத்தைத் தொலைப்பித்து மலத்தைப் பக்குவமாக்கி ஞானாசிரியராய் எழுந்தருளி வந்தார். அநாதி காலம் தொட்டு இது காறும் திருவருள் கிடையாமல் பிறப்பு இறப்புக்குட்பட்டுப் பெருந் துன்பத்தில் உழன்ற நம்மை, அருள் மிகுதியினாலே பெறுதற்கரிய திருவடியைத் தந்து அடிமை கொண்டார்.

நம்செயல் அற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற. (6)

எல்லாவற்றையும் சிவபெருமான் கூடி நின்று கூட்டுகிற முறைமையை அறியாமல் தன்னாலே செய்யப்பட்டதென்று கருதும் உயிரியல்பாகிய எனது என்னும் மமகாரமும், இந்தச் செயலைச் செய்கின்ற வினை முதல் நானே என்று கருதும் அகங்காரமும் ஞானாசிரியர் எழுந்தருளி வந்து அடிமை கொண்ட அப்பொழுதே அற்றுப்போகச் சிவபெருமான் இவனை எடுத்துக்கொண்டு இவன் செயலெல்லாம் தன் செயலாக்கி இவனும் தானாகவே நிற்பார். தன்னைத் தந்தவனுக்குச் சிவபெருமானும் வேறு பதங்களைக் கொடுக்காமல் தன்னையே கொடுப்பார்.

யான், எனது என்னும் செருக்கற்றுச் சிவத்துடன் ஒன்றி நின்றவர்க்குச் சிவபெருமான் தன்னைக் கொடுத்து அவர் செய்யும் செயலனைத்தையும் தன் செயலாக ஏற்றுக் கொள்வார். அருள்வழி நிற்கும் சீவன் முத்தனாகிய சிவஞானி தனக்கெனச் செயலற்றிருப்பான். "அவனே தானே ஆகிய அந்நெறி, ஏகன் ஆகி இறைபணி நிற்க, மலமாயை தன்னொடு வல்வினை இன்றே" என்பது சிவஞான போதம். ஞானாசிரியரது நல்லருளைப் பெற்று, அவர் உணர்த்திய நன்னெறியில் நின்றொழுகிப் பசுகரணங்கள் சிவகரணங்களாகிச் செயற்பட நிற்கும் சிவஞானிகள் செய்யும் செயலெல்லாம் சிவன் செயலேயாகும். யான் செய்தேனென்றும், பிறர் செய்தாரென்றும் வினைமுதல்களை வேறு படுத்திக் காணுவது, ஆன்ம போதத்தால் நிகழுவதாகும். எல்லாம் சிவன் செயல்" என்னும் உண்மையை உணரமுடியாத கோணையை ஞானத்தீயினாலேயே எரிக்க வேண்டும். கோணை நீங்கிச் செவ்வே நின்றால், சிவம் தன்னை அளிக்கும். எத்தனையும் கீழான இவனை எடுத்துக் கொண்டு எத்தனையும் மேலான தன்னை வழங்கும் சிவபெருமானது உதவிக்கு ஈடு ஏது? இதனாலேயே "தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கரா ஆர் கொலோ சதுரர்" என்று மணிவாசக அடிகள் வினவுகின்றார். சீவன் முத்தர்களாகிய சிவஞானிகள் "சங்கரனோடு ஒக்க உறைந்து, இவர் அவனை அவன் இவரைவிடாதே உடந்தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர்" என்று சிவஞான சித்தியார் தெரிவிக்கின்றது. "சந்ததமும் எனது செயல் நினது செயல்

யானெனும் தன்மை நினையன்றி இல்லாத் தன்மையால் வேற லேன்" என்னும் தாயுமான அடிகள் திருவாக்கு இங்கே நினைவுகூர்தற்குரியது. இந்த அரிய பேறு, ஏகான்மவாத ஆன்ம ஞானிக்கு எய்துவதன்று. அவனுக்கு எல்லாம் சிவன் செயலால் வருவது என்னும் தெளிவு வாராது. தானே சிவ மன்றி வேறு சிவமொன்றில்லை என்னும் மயக்க உணர்வுடை யார்க்கு இத்தெளிவு எங்ஙனம் உண்டாகும்? சித்தாந்த சைவ ஞான நூல்களைக் கற்று அநுபவமுடைய ஞானதேசிகரது அருள் கூடியவர்களுக்கே இது உண்டாகும்,

— (தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டு ரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர் வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 4–00 வெளிநாடு ரூ. 6-00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"

தருமபுரம், மாயூரம் P. O.

மாறட்டான் குன்றம் உடைத்து

திரு: வித்துவான், வே. மகாதேவன் அவர்கள்;
திருப்பனந்தாள்

மதுரை மாநகரின் மேற்கில் நான்குகல் தொலைவில் இருப்பது திருப்பரங்குன்றம். இதன் பெருமைகள் மிகப்பல பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலங்கள் பன்னிரண்டுள் ஒன்று; திருஞானசம்பந்தர், சுந்தரர் திருப்பதியங்களைப் பெற்றது; நக்கீரர் வாழ்ந்த நற்றலம், ஆற்றுப்படை வீடு களுள் ஒன்று; பரிபாடல் முதலான பல இலக்கியங்களில் பாராட்டப் பெற்றது, இம்மாறட்டான்குன்றம். தலையான குடைவரைக் கோயில்கள் பலகொண்ட பெருமை உடையது திருப்பரங்குன்றம்.

முருகன் கோயில்:

பரங்குன்றம் செல்லும் பலரும் காணும் சிறப்புப் பெற்றது முருகன் திருக்கோயில்; இந்நாளில் பல மண்டபங் களும், கோபுரங்களும் உடையதாக இருப்பினும் இது குடை வரைக் கோயிலே யாகும்.

திருப்பரங்குன்ற முருகன் கோயிலின் மிகப்பழம் பகுதி: திருமால், முருகன், கணபதி, துர்க்கை, சிவபெருமான் ஆகிய ஐம் பெரும் கடவுளர்க்கும் குடைவிக்கப்பெற்ற குடைவரை களை உடையதாக உள்ளது. இக்குகைகளின் இருபுறமும் சிறிது தாழ்வில் துர்க்கை, சேட்டைகள் புறமொன்றாக இரு மருங்கிலும் அமைந்துள்ளன.

நெடுஞ்சடையன்பராந்தகன் என்னும் பாண்டிய மன்னன் கி. பி 775 முதல் 790 முடிய ஆட்சி செய்தவன். இவன் காலத்தில்தான் திருப்பரங்குன்றத்திலும், ஆனை மலையிலும் குகைக் கோயில்கள் குடைவிக்கப் பெற்றன.

'சாத்தன்கணவதி' என்பவன், நெடுஞ்சடையன் பராந் தகன் கால அரசியல் தலைவன்; கரவந்தபுரம் என்னும் நகரினைச்

சேர்ந்த சாத்தன் என்பவனுடைய மகன்; 'கணவதி' என்னும் பெயரினன்; நெடுஞ்சடையனின் ஆட்சித் தொடக்க காலத்தில் மா சாமந்தனாக இருந்தவன். அமிர்த மங்கலப் பேரரையன் என்றும் கணவதி ஆயின சாமந்த பீமன் என்னும் இவனைக் கல்லெழுத்துக்கள் கூறுகின்றன.

திருப்பரங்குன்றம் துர்க்கை கோயிலின் மேற்புறமுள்ள கல்வெட்டு ஒன்று, 'கணவதி ஆயின சாமந்தபீமன் சம்புவு சிவனு)க்குக் கோயில் குடைவித்த செய்தி'யைக் கூறுகிறது. இது கி. பி. 773(கலி. 3874)க்கு உரிய கல்வெட்டு ஆகும். மாறஞ்சடையனுடைய ஆறும் ஆட்சியாண்டுக்குரிய இன்னொரு கல்வெட்டு, அமிர்தமங்கலப் பேரரையனான சாத்தன் கணவதி திருக்கோயில் எடுத்தமை; திருப்பணிகள் செய்தமை; திருக்குளம் திருத்துவித்தமை பற்றிக் கூறுகிறது. எனவே இக்குடைவரைக்கோயில்கள் கி.பி 773ல் நிறைவுற்றபணிகள் ஆதல் உறுதி.

திருப்பரங்குன்றில் உள்ள "சேட்டை தூர்க்கைக் குடைவரைத் தளிகள் சாத்தன் கணவதியின் மனைவியாகிய நக்கன் கொற்றியால் அமைக்கப்பெற்றன" என்பது கல்வெட்டுப் பிற்பகுதியில் காணப்பெறும் செய்தி.

திருப்பரங்குன்றில் 11 கல்வெட்டுக்கள் இருத்தலைச் செவல் பாதிரியாரின் குறிப்புக்களால் அறிகிறோம்; சுப்பிரமணிய சுவாமி கோயிலின் உட்கோபுரத்துச் சுவரில் உள்ள கி. பி. 1792(சகம் 1714 பரிதாபி வருடம் பங்குனி 4ஆம் தேதி; புதன் கிழமைக்)குரிய தொருகல்வெட்டு, "அசாத கேபில நவாபு நாட்டை ஆண்டுகொண்டிருந்தார்; அமீர் காதர் சாயபு ஆளுநராக இப்பகுதியை ஆண்டுவந்தார். இக்காலத்து ஐரோப்பியர் சேனைப்பிரிவு ஒன்று மதுரையை நோக்கி வந்தது; திருக்கோயிலில் பல அழிவுகளைச் செய்தது; மதுரையைத் தன்வசமாக்கி முன்னேறத் துவங்கியது. படை முன்னேறுதலைத் தடைசெய்யத் திருப்பரங்குன்றக் கோயிலலுவலரும் பொதுமக்களும் எண்ணினர். இவர் ஆலோசனைப்படி வயிராவி முத்துக்கருப்பன் மகன் குட்டி என்பவன் இக்கோயில் கோபுரத்தின் உச்சியில் இருந்து விழுந்தான்;

உயிர்நீத்தான்; ஐரோப்பிய படையினர் அணிகளுக்குப் பலத்த எதிர்ப்பினைக் காட்டினான். இவன் மரபினருக்கு மான்யங்கள் தரப்பெற்றன" என்று கூறுகிறது.

போலாலயன் செய்த படுக்கைகள்:

திருப்பரங்குன்றின் இடைப்பகுதியில் இயல்பான குடைவரை இருக்கிறது. இயல்புக் குகை இக்காலத்தில் 'பஞ்ச பாண்டவர் படுக்கை' என மக்களால் குறிப்பிடப்படுகிறது. இக்குகையைப் படிகளின் வழியாகச் சென்று அடையலாம். இவ்வழியே சென்றால், புண்ணிய தீர்த்தமாகக் கருதப்பெறும் தொன்மையும் தண்மையும் அழகும் உள்ள சுனைஒன்று முதலில் காட்சி தரும்.

சுனைக்கு அடுத்த மேற்பகுதியில் இயல்பாக அமைந்த குகை இருக்கிறது. இந்தக் குகையில் படுக்கைகள் சிலகாணப் படுகின்றன. இக்குகையை மேற்பகுதி கீழ்ப்பகுதி என இரண்டு பகுதியனவாகப் பிரித்தல் வேண்டும். குகையின் மேற்பகுதியில் மூன்று கல் வெட்டுக்களும், கீழ்ப்பகுதியில் ஒரு கல்வெட்டும் ஆகநான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. இவை 'தாமிழி' எனப்பெறும் மிகப் பழந்தமிழ் எழுத்துக் கல் வெட்டுக்கள் ஆகும்.

குகையின் மேற்பகுதில் உள்ள மூன்று கல்வெட்டுக்கள் முற்பட்ட காலத்து எழுத்தமைதி கொண்டவை. வரலாற்று ஆராய்ச்சியாளரால் கி. மு. 200 – 100 க்கும் இடையில் அமைந்த கல் வெட்டுக்களாக இவை கருதப்பெறுகின்றன. இரண்டு சிதைந்துள்ளன. மூன்றுவது கல்வெட்டு 'அந்துவன் கொடுபிதணன்' என்பது.

ஆசிரியர் நல்லந்துவனார் பரிபாடலில்; 6, 8, 11, 20 ஆகிய நான்கு பாடல்களைப் பாடியுள்ளார்: நல்லந்துவன் நெய்தல் பாடியவர். இவர் மதுரையாசிரியர் நல்லந்துவனார் எனப்பெறுவார். எட்டாம் பரிபாடலில், "திருமால் முதலியோர் வந்து தொழுவதனால் பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்" எனவும், "சரவணப் பொய்கையைப் பரங் குன்றின் சுனை ஒக்கும்" எனவும் பாடியுள்ளார். அகநானூறு என்னும் நூலில் மதுரைமருதனிளநாகனார் என்னும் புலவர்,

''சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்
சீர்மிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
இன்தீம் பைஞ்சுனை''

என நல்லந்துவனார் திருப்பரங்குன்றத்தைப் பாடியமையைச் சிறப்பித்துள்ளார்.

நல்லந்துவனரால் பாடப்பெற்ற திருப்பரங்குன்றச் சுனையருகால் உள்ள குகையின் மேற்புறத்தில் உள்ள கல்வெட்டிற் கண்ட 'அந்துவன்' கால இடத்தொடர்ச்சிகளை நோக்கி ஆசிரியர் நல்லந்துவனாரே எனலாம்.

குகையின் கீழ்ப்பகுதியில் அமைந்த கல்வெட்டு கி. பி. 100க்கும் 200க்கும் இடைப்பட்ட காலத்தது ஆகும். இக் கல்வெட்டுக்கு, ''ஈழக்குடும்பத்தைச் சேர்ந்தவனும் எருக் காட்டூர் என்னும் ஊரினைச்சேர்ந்தவனும் ஆகிய போலாலயன் என்பான் இப்படுக்கைகளையும் நெடிய இருக்கையையும் செய் தான்'' எனத்திரு. இரா.நாகசாமி அவர்களும், ''போலாலயன் இதனைக் கொடுத்தான்; ஆய்சயன் நெடுஞ்சாத்தன் இவற் றைச்செய்தனர்'' எனத் திரு. ஐராவதம் மகாதேவன் அவர் களும் பொருள் கூறுவர்.

'பஞ்சபாண்டவர் படுக்கை' எனப்பெறும் இயல்பான இக்குகைப்பகுதி சங்ககாலத் தொன்மையுடையது. சமண சமய முனிவர் இருந்த பகுதியாகலாம்.

சுந்தரபாண்டியஈஸ்வரம்:

திருப்பரங்குன்றத்து மலையின் தென்புறம் குடைவரைக் கோயில் ஒன்றுள்ளது; உமையாண்டார் கோயில்என இந்தக் குகைக்கோயில் வழங்கப்பெறுகிறது; இதன் பழைய பெயர் சுந்தரபாண்டியஈஸ்வரம் என்பதாகும்.

கி. பி. 1216 முதல் 1238 முடிய ஆட்சிபுரிந்த பாண்டிய அரசனாகிய முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இக்குடைவரைத்தளி உருவாக்கப்பெற்றது. இக்கோயிலில் இச்சுந்தரபாண்டியனின் 7ஆம் ஆண்டு 325ஆம் நாளுக்கு உரிய கல்வெட்டு ஒன்றுள்ளது.

இந்தக் குகைக்கோயில் 'இராவனர் பிரசன்னதேவர்' என்பவரால் குடைவிக்கப்பட்டது. இச்செய்தியை,

> ''இராவனர் பிரஸந்ந தேவர்,
> திருப்பரங்குன்றத்துத் தென்பாக்க கறுக்குட பாகத்தில்
> எழுந்தருளுவித்த
> சுந்தரபாண்டியஈஸ்வரம் உடையார்''

என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறிகிறோம்,

முதல்மாறவர்மன் சுந்தரபாண்டியன், 'மதுரோதய வளநாட்டு மாடக்குளக் கீழ்மதுரைக் கோயில் பள்ளியறைக் கூடத்துப்பள்ளிப்பீடம் மழவராயனில்' எருந்தருளி இருந்து, இராவனர் பிரசன்னதேவரால் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருள் விக்கப்பெற்ற சுந்தரபாண்டிய ஈஸ்வரம் உடையார்க்குத் திருப்படிமாற்று முதலானவற்றுக்கும், திருப்பணிக்கும் வேண்டுவன வற்றுக்காக வீரநாராயணக் குளக் கீழ்புளிக் குன்றூரான சுந்தரபாண்டிய புரத்தில் கண்டுழவான (அரசனுக்குச் சொந்தமான) நிலத்தில் ஒருபக்கமடைய மலைக் குடிக் கோலால் பெரும்பூவும் முக்கியப்பயிரும் குறுவையும் நிலத்தில் ஆறுமாவும், ஒருபூ (ஒரு போகம்) விளையும் நிலத்தில் ஆறுமாவும் ஆகப் பன்னிரண்டு மா, நிலத்தைக் காராண்கிழமை(குடிவாரம்), மீயாட்சி (மேல்வாரம்), வெட்டிப்பாட்டம் (வெட்டியானுக்காகச்செலுத்துவது), பஞ்சுபிலி (பஞ்சுவரி), சந்துவிக்கிரகப் பேறு (மத்தியஸ்தனுக்காக) முதலிய வரிகளில் இருந்து விலக்கி இறையிலியாகத் தந்தான். பல அலுவலர் உள்வரிக்குக் கையொப்பமிட்டுள்ளனர்,

இந்தக் குகைக்கோயில், இன்னும் மயில்கள் நடம்புரிய, மான்கள் புறம்திரிய அமைதியான சூழலில் அமைந்துள்ளது.

முடிப்புரை

மாறட்டான் குன்றம் இலக்கியச் சிறப்புடைத்தாதலோடு வரலாற்றுச் சிறப்பும் உடையது. நெடுஞ்சடையான் பராந்தகன் காலக் குடைவரைக்கோயில்கள், சங்கத்தொன்மையுடைய இயல்பானகுகை, முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலச் சுந்தரபாண்டிய ஈஸ்வரம் ஆகியவற்றை உடைமை மாறட்டான் குன்றத்துக்கு மட்டுமின்றி மாமன்னர் பாண்டியர்க்கும் பெருமை தருவதே ஆகும்.

ஆலய நிர்வாகிகளே!

அசந்து விடாதீர்கள்!

திரு. அருணகிரிதாசன் P. S. இராமமூர்த்தி அவர்கள்,
டால்மியாபுரம்.
[திருச்சி மாவட்டம்]

"இக்கட்டுரை காலத்திற்கேற்றது. காலநிலைமையை உன்னுங்கால் இத்தகைய கட்டுரைகள் இன்றியமையாதனவே. இக்கட்டுரை ஆலய கண் காணிப்பாளர்களுக்கு ஊக்கம் அளிப்பது, பெருகிவரும் கயவர்களின் கருவைச் சிதைப்பது." —ஆசிரியர்.

"சாஸ்திரங்களில் வரையறுக்கப்பட்ட முறைகளை யொட்டித் திருமணங்கள் நடைபெறு! தம்பதிகளுக்குள் என்றும் ஒற்றுமை இராது! குரு-சீட பாவம் குறைந்துவிடும்! தாங்கள் வகுத்துக்கொண்ட வாழ்க்கை முறைகளையே சாஸ் திரங்கள் என வலியுறுத்துவர்! பொருள் குவிந்தவரெல்லாம் பெரியவர் எனக் கருதப்படுவர்! குணம் குறைந்தவனுனாலும் பணம் படைத்தவனையே கணவனுக்கிக்கொள்ள பெண்கள் பெரிதும் விரும்புவர்! தேவாராதனம் முதலிய இறைபணிகள் சிறுகச்சிறுகக் குறைந்து விடும்! கடவுளர்களை நிந்திப்பர்! வேதங்கள் சாஸ்திரங்கள், புராணங்கள் ஆகியவற்றை வெறுத்து ஒதுக்குவர்! தாங்க முடியாத பஞ்சம் வந்து தாக்க, மக்கள் தவிப்பர்!"

மேலேகண்ட உண்மைகள், இக்காலச்சூழ்நிலையை அப் படியே படம் பிடித்துக்காட்டுகிறது என்றாலும், பல ஆண் டுகட்கு முன்பே "நைமிசாரண்யத்தில், தமது சிஷ்யர்களுக்கு கலியுக தர்மத்தைப்பற்றி விவரிக்கும்போது. இந்த உண்மை கள் சிலவற்றை எடுத்துக் கூறினர் வியாச முனிவர். முக்கால மும் உணர்ந்த முனிவர் இக்காலத்தைப் பற்றி அக்காலமே கூறிவிட்டார்! சத்திய வாக்கு அல்லவா!

'இறைவன் இல்லை; இறைவன் இல்லை! என்று மக்களில் சிலர் பேசி பொருள் குவித்தார்கள்! மனச்சாட்சிக்கு ஒப்பான வனே இறைவன்! 'இறைவன் இல்லை' என கூச்சல் போட்ட

வர்கள் எல்லாம் மனச்சாட்சியற்றவர்களானுர்கள்!மனச்சாட்சியற்றவர்கள் தங்கள் மனம் செல்லும் வழியில் சென்று தகாத செயல்களைச் செய்ய முற்படுகிருர்கள்.

மேலோர்கள் மனம் புண்படும்படியாக, மனச்சாட்சியற்ற மனிதன் எந்தத் தீய செயல்களையும் புரியத் துணிந்து விடுகிருன்.

தீயர்களின் தகாத செயல்கள் பலவற்றில் ஒன்றைக் கீழே காண்போம்;

"இங்கு தெப்பக்குளம் அருகேயுள்ள ஸ்ரீ நாகநாத சுவாமி கோவிலிலிருந்து சிவகாம சுந்தரியின் விக்கிரகம் நேற்றிரவு திருடப்பட்டுள்ளது. நேற்றிரவு இத் திருடர்கள், கதவைஉடைத்து உள்ளே புகுந்து, விக்கிரகத்தைத் திருடிச் சென்றனர் என்று கூறப்படுகிறது. திருடர்கள் பகவான் நடராஜர், சிவகாமசுந்தரி இருவிக்கிரகங்களையும் எடுத்து பக்கத்திலுள்ள ஒரு கட்டிடத்தின் மேல் மாடிக்குச்சென்று, அங்கிருந்து கயிறுகட்டி, சிவகாமசுந்தரி விக்கிரகத்தை கீழே இறக்கினுன் இதே போன்று $4\frac{1}{2}$ அடி உயரமுள்ள நடராஜர் விக்கிரகத்தை இறக்குகையில் காவல்காரர் விழித்துக்கொண்டு கூச்சல் போடவே, திருடர்கள் நடராஜர் விக்கிரகத்தை விட்டுவிட்டு சிவகாமசுந்தரி விக்கிரகத்துடன் அங்கே காத்துக்கொண்டிருந்த ஆட்டோ ரிக்சாவில் தப்பிச் சென்றனர்!

சென்ற அக்டோபர் மாதம் 20ந்தேதி திருச்சி நகரில் நடந்த, மனச்சாட்சியில்லா மனிதனின் மடத்தனமான திருவிளையாட்டே இது!

பத்திரிகைகளில் வெளிவந்த இச்செய்தியைப் படித்த அடியார்கள், அன்பர்கள் கண்ணீர் பெருக்குவர், நல்லோர்கள், காலத்தின் போக்கைக் கண்டு நடுங்குவர் என்பதில் ஐயமில்லை. மக்களுக்கு வாழ்வளிக்கும் நல்தொழில்கள் வளராவிட்டாலும் திறமை நிரம்பிய திருட்டுத் தொழில்கள் நம் நாட்டிலே ஏன் உலகெங்கணும் செழித்து வளர்ந்து வருகின்றன!

அந்நிய நாட்டுக் கலாச்சாரத்தோடு நம் நாட்டுக் கலாச்சாரத்தை வைத்து ஆராய்ந்து பார்த்தால் நம் நாட்டுக் கலாச்சாரமே முதன்மையானது என ஆராய்ச்சியாளர் முடிவெடுப்பர். இதற்குக் காரணமென்ன...? நம் நாட்டுக் கலாச்சாரம் வாழ்க்கை முறைகள் எல்லாமே தெய்வீகத்தை வித்தாகக் கொண்டு அமைந்தவை. அந்தத் தெய்வீக வித்துக்கள்தான் கடவுளர்களின் திருச்சிலைகள்!

மாணிக்கத்திலும் மரகதத்திலும் நமது கடவுளர்களின் திருச்சிலைகள் வடிக்கப்பட்டதாக புராணங்கள், வரலாறுகள் வாயிலாக அறியப்படுகிறது. அச்சிலைகள் எல்லாம் மண்ணில் மறைந்து விட்டனவா அல்லது மன்னர்களின் மணி மகுடமாக மாறினவா என்று தெரியவில்லை!

கேணிவெட்டப்போனால் கந்தப்பெருமானின் திருஉருவச்சிலை! வீட்டுக்கு அஸ்திவாரம் தோண்டினால் விநாயகப் பெருமானின் திருவுருவச்சிலை! ஏரிகளை விரிவுபடுத்த முயன்றால் அம்மன் சிலைகள்! ஆண்டவன் சிலைகள்! இவ்வாறு மண்ணிலே மறைந்த சிலைகள் எண்ணிலடங்கா!

நாடாசை கொண்ட வேற்றுமத மன்னர்கள் நம் நாட்டைச் சுரண்டியதுமல்லாமல் நம் தெய்வங்களின் புனிதத் திருவுருவச்சிலைகளை மண்ணிலும் குளத்திலும் ஏரிகளிலும் எரிந்து நம் மதத்திற்கு அழிவைத் தேடச்செய்த துரோகச் செயல்கள் பற்றி சரித்திரங்கள் வாயிலாக நன்கு அறியலாம். அந்நியர் நமக்குச் செய்த தீய செயல் இது!

இன்று...? நம்மில் சிலர்-மனச்சாட்சியற்றவர்கள்-நம்மிடையே இருந்துகொண்டு மத நம்பிக்கைக்கு மாசுகற்பிக்கிறார்களே என்று எண்ணுங்கால் மனம் கொதிப்படைகிறது. கடவுளர்களின் சிலைகளைத் திருடுபவர்கள் அந்நியர்களின் கைக்கூலிகளாகத்தான் இருப்பார்கள் என்றே நினைக்கலாம். ஏனென்றால் தெய்வநம்பிக்கைநிறைந்த நம் மக்களே திருடப்பட்ட நம் கடவுளர்களின் திருவுருவச்சிலைகளை வாங்கித் திருடர்களுக்கு ஆக்கம் அளிக்கமாட்டார்கள் என நம்பலாம். வள்ளுவர் வாழ்ந்த நாட்டிலே இன்று கள்ளர்கள் மலிந்து விட்டார்கள்!

பகுத்தறிவு நிரம்பப்பெற்ற நம்மக்களில் சிலரே அறிவிலியாகவும் அந்நியர்களின் அடிமைகளாகவும் மாறி ஈனத் தொழிலில் ஈடுபட்டதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் ஒன்ருக அவர்களது "சிந்திக்கத் தெரியாத் தன்மையை" கூறலாம்!

"விநாயகக் கடவுளுக்கு வைரக்கிரீடமா! முருகக் கடவுளுக்கு முத்துப் பதக்கமா! ரங்கநாதருக்கு தங்கப் பல்லக்கா! கடவுள் என்பது கற்பனையே! கோவில் சாமி இல்லை! ஆலயங்களையெல்லாம் அரிசிக் கிடங்குகளாக ஆக்கவேண்டும்! அனுதை இல்லங்களாக அமைக்க வேண்டும்!" என்று அடுக்கு மொழிகளிலே, அலங்காரப் பாணியிலே, சந்து பொந்துகளிலெல்லாம் மேடைகளமைத்து, ஆண்டவனையே "நினைத்து நினைத்து" நிந்தித்து, அன்று பேசிய பெரியோர்களுக்கெல்லாம் ஆறுமுகப்பெருமான் நல்லருள் பாவித்துள்ளான். இன்றுஅவர்களெல்லாம் 'தனக்கு நிகரில்லை' என்று தமிழ் நாட்டையே வலம் வந்து கொண்டிருப்பதை யாவரும் அறிவர். கந்தனின் கருணைக்கு வரம்பு ஏது?

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன்வள்ளிகாந்தன் என்று கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் தெளிவு படுத்துவார்.

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்ருல் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்" என்னும் உண்மையை கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுவார்.

ஆனால், தன் அர்த்தமற்ற அவர்களின் அடுக்கு மொழிகளில், அலங்காரப் பேச்சுகளில், உள்ளத்தைப் பறிகொடுத்த சிலர், சிந்திக்க தெரியாத் தன்மையினுல் அசடர்களாகி "ஆண்டவனையே மறந்தனர்!" இறைவனையே மறந்தஅவர்கள் மனச்சாட்சி யற்றவர்களாக ஆனுர்கள்! வாழ வகையில்லாத அவர்கள், வாழ்க்கையை நடத்துவதற்காக பல வகையில் திருட்டுத் தொழில்களைச் செய்ய முற்பட்டனர்! அவற்றில் ஒரு தொழில்தான் 'கோவில் சொத்தைக் கொள்ளையடிப்பது!'

'ருசி கண்டபூனை உறி இருக்கும் இடமெல்லாம் சென்று தாவும்!' சிலைத் திருட்டில் பெரும் பொருள்கண்ட அசடர்கள்

அறிவிலிகள் இன்று கோவில்கள் தோறும் கொள்ளையடிக்க முற்படுகின்றனர் என்று பத்திரிகைகள் வாயிலாக நாம் தெளியலாம்.

இந்தத் திருட்டு ஆந்தைகளும், குருட்டுப் பூனைகளும் கொள்ளையடிக்க எப்படி வருவார்கள்; எப்பொழுது தொழிலைத் துவங்குவார்கள் என்று யாராலும் கூற இயலாது!

ஆலய நிர்வாகிகளும் பணியாளர்களும் அருச்சகர்களும் சற்று முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்று கூறும் முகத்தான் நல்ல நோக்கோடு சில யோசனைகள் இங்கே சமர்ப்பிக்கப் படுகின்றன. ஆலய நிர்வாகிகளும் ஆத்திகப் பெருமக்களும் அன்புடன் இந்த யோசனைகளை வரவேற்பார்கள் என்று நம்பப்படுகிறது.

இக்காலத்தில் நடைபெறும் திருட்டுச் செயல்களை ஆராய்ந்து கவனித்தால் கொள்ளைக் கூட்டத்தினர் பின்பற்றும் நவீன முறைகளையும் தந்திரங்களையும் நாம் சிறிது அறியலாம்

இரவு நேரத்தில் ஈனத்தொழிலில் ஈடுபடும் இத்திருட்டுக் கூட்டத்தினர், பகல் நேரத்தில் திருக்கூட்டத்தினராக மாறி, இறைவனை தரிசிக்க வரும் நன்மக்களோடு ஒன்று கலந்து, உளவு தெரிந்துகொள்வார்கள்என்று கருதலாம். விக்கிரகங்கள் வாகனங்கள், ஆபரணங்கள் எங்கே பாதுகாக்கப்படுகின்றன. ஆலயக் கதவுகளின் நிலைமை, சுவர்கள் அமைந்திருக்கும் தன்மை போன்றவற்றை நன்கு அறிந்து கொண்டு, அதற்குத் தகுந்தாற் போல் திட்டங்கள் தீட்டி, சமூகத் துரோகிகள் செயல்படுவார்கள் என்று முடிவு கொள்ளலாம்.

சில திருடும் சின்ன புத்திக்காரர்கள் இப்படியும் சதி செய்து செயல்பட மாட்டார்களா?.

1. நம் திருக்கோவில்களில் திருவிழாக் காலங்களில் ஆண்டவனுக்கு விலையுயர்ந்த ஆபரணங்களை அணிவித்திருப்பார்கள். இத்திருக் கோலத்தை அடிக்கடி கவனிக்க முடியாத நிலையில் ஆலய நிர்வாக அலுவலகம், மூலத்தானத்திலிருந்தோ அல்லது உத்சவ விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கும் மண்ட

பத்திலிருந்தோ தள்ளியே அமைந்திருக்கும், சிலஆலயங்களில் நிர்வாக அலுவலகம் கோவிலுக்கு வெளியிலேயே அமைந்துள்ளது. திருவிழாக் காலங்களில் ஆண்டவனை தரிசிக்கவரும் திருக்கூட்டத்தினர் இறைவனை வணங்கிப் பிரசாதம் பெற்றுச் சென்று விடுவர்.

ஆனுல் திருக்கூட்டத்தினருடன் ஒன்றிய திருட்டுக் கூட்டத்தினர் அங்கேயே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருப்பார்கள்! பக்தர்களே யில்லாது அருச்சகர் மாத்திரம் ஆண்டவன் சந்நிதானத்தில் அமர்ந்திருக்கும் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு இத்திருட்டுக் கூட்டத்தினர், மயக்க மருந்தால் மயக்கியோ அல்லது வேறு வகைகளிலோ அருச்சகரை அப்புறப்படுத்தி ஆபரணங்களை அபகரிக்க முற்படலாம். இரவு நேரமாய் இருந்தால், மின்சாரத்தை தடைசெய்து இருட்டடைப்பு உண்டாக்கி கொள்ளையடிக்க எத்தனிக்கலாம்!

மணிக்கணக்கில் ஆலயத்தைச் சுற்றிவரும் நபர்களை, அருச்சகர்களும் பணியாளர்களும் கோவில் நிர்வாகிகளும் சற்று உஷாராகக் கண்காணித்து வருவது நல்லது. பேட்டரியால் இயங்கும் அபாயச் சங்குகளை பொருத்தமான இடத்தில் இரகசியமான முறையில் அமைத்துப் பயன்படுத்திஞல் திருட்டைத் தவிர்க்கலாம்.

2. திருவிழாக் காலங்களில் இரவு நேரங்களில் தான் ஆண்டவனின் திருவுருவச்சிலைகள் வீதி உலா வருகின்றன. வீதி உலாவின்போது ஆண்டவன் எழுந்தருளியிருக்கும் பீடத்தையோ அல்லது சப்பரத்தையே சிலர் சுமந்து வருவர். இன்னும் சிலர் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் தாங்குவர். இவ்வாறு உதவி செய்பவர்கள் ஆலய நிர்வாகிகளுக்கு நன்கு அறிமுக மானவர்களாகவே இருத்தல் நல்லது.

ஏனென்ருல் திருட்டுக் கூட்டத்தினரும் தங்கள் சதித்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு உதவியாளர்களாக அமைந்துவிடலாம். நன்கு இருட்டு சூழ்ந்தவுடன் பெட்ரோமாக்ஸ் விளக்குகளை அணைத்துவிட்டு ஏதாவது வெடிகளை வீசி, சூழ்ந்தவர்களை பயந்து ஓடும்படியாகச் செய்து, திருச்

சிலைகளையும் ஆபரணங்களையும் அப்படியே 'அபேஸ்' செய்து விடுவார்கள் தீயர்கள்.

3. இறைவன் வீதிஉலா வரும்போது பரிவாரதேவதைகள் முன்னே புறப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. முன்னேசெல்லும் பரிவார தேவதைகளின் வாகனங்களையோ சப்பரங்களையோ தொடர்ந்து சஞ்சாரணித்துச் செயல்படுவது நல்லது கொள்ளையடிக்கும் நோக்கங் கொண்ட குண்டர்கள் பரிவார தேவதைகளின் ஓரிரு சப்பரங்களைத் திசைமாற்றித் தூக்கிச்சென்று விடுவர்! கோவில் நிர்வாகிகள் உத்திரவுப்படி சப்பரத்தைத் தூக்கிச் செல்கிறுர்கள் என்றுதான் சூழ்ந்துள்ள மக்கள் நினைப்பர்! சப்பரமும் கடவுளர் சிலையும் மறைந்து விடும்!.

4. எல்லோரும் ஆலயத்தை விட்டு வெளியேறி விட்டார்களா என்று கவனித்த பின்னர், கோவிலைப் பூட்டுவது நல்லது, ஏனென்ருல் ஆலயத்தின் மறைந்த பகுதிகளில் பதுங்கியிருந்து, படுபாவிகள் தங்கள் திருட்டுத் தொழிலைத் துவங்க முயற்சிக்கலாம்.

ஆலய நிர்வாகிகளே! பணியாளர்களே! அருச்சகர்களே! அசந்து விடாதீர்கள்! ஆண்டவன் அருள் என்றும் உங்களுக்குத் துணையாக இருக்கட்டும்!

——

சிவ சிவ]

அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

5. காவிய மாளிகையின் வாயிலிலே

அருள்மொழித் தேவர் என்ற சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணத்தில் வரும் ஒவ்வொரு நாயனாரும் செயற்கரும் செய்கை செய்த தீரர். இன்றைய நிலையை வைத்துக் கொண்டு இப்படிச் செய்பலாமா, இப்படியும் நடக்குமா என்றெல்லாம் கேள்வி கேட்பது சரியல்ல. செயற்கரியது என்பதன் பொருள்வேறு. இக்காலத்தில் சிறுத்தொண்டர் மாதிரி தன் குழந்தையை எவரும் அரிந்து அமுதூட்ட மாட்டார். அப்படிச் செய்தாலும் குழந்தை மீண்டும் உயிர்பெற்றுச் சிறுத்தொண்டரிடம் திரும்பிவந்த மாதிரி நடக்கப் போவதில்லை. நாயனரின் பக்திநிலை வேறு. இன்றைய நிலை வேறு. சிறுத்தொண்டர் மாதிரி நமக்கும் பக்தி ஏற்பட வேண்டுமென்றும் இறைவன் அவருக்குக் காட்சி அளித்தமாதிரி நமக்கும் அளிக்கட்டும் என வேண்டுவோமாக!

சில தல புராணங்களில் நாயன்மார்களின் வரலாற்றுச் சம்பவங்கள் சில, திருத்தொண்டர் புராணத்தில் காணப்படாதவைகளாக உள்ளன. எனவே பல செய்திகளையும் திரட்டிச் சேக்கிழார் பெருமானுடைய வாக்கிற் பிறந்தவற்றை முக்கியமான வைகளாக் காட்டி கட்டுரைகளை எழுத ஆவலுடையேம்.

சில இடங்கள் சிறிது குழப்பமான செய்திகளும் கிடைக்கின்றன உதாரணமாக,

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்:
நாவினுக் கரையன்: நாளைப் போவானும்
கற்ற நற்சூதன்' நற்சாக்கியன்: சிலந்தி:
கண்ணப்பன்: கணம்புல்லன் என்றிவர்கள்

குற்றஞ் செய்யினும் குணமெனக் கொள்ளும்
கொள்கை கண்டு நின்குரை கழலடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கைசூழ் திருப்புன் கூருளானே. [7–563]

என்று சுந்தரமூர்த்தி நாயனுர் பாடியுள்ளார். இதற்கு உரையாசிரியகள் "ஞானசம்பந்தர் சமணரைக் கழுவேற்றிய போது பாண்டியனிடம் கூறித்தடுக்கா திருந்தது குற்றம். நாவுக்கரசர் பிற சமயத்திலிருந்த போது இறைவனை இகழ்ந்தது குற்றம். நாளைப் போவார்தில்லை நகருள்ளும் திருக்கோயிலுள்ளும் புக முயன்றது குற்றம். சாக்கியர் இறைவன் மீது கல்லெறிந்தது குற்றம். சிலந்திவாய் நூலால் இலிங்கத்தின்மீது கூடுகட்டியது குற்றம். கண்ணப்பர் இறைவன் மீது எச்சில் நீரை உமிழ்ந்து, எச்சிற்பட்ட இறைச்சியை அளித்துச் செருப்புக்காலை இறைவன் முடிமீது வைத்ததும் குற்றம். கணம் புல்லர் தலைமயிரைத் திருக்கோயிலில் எரித்தது குற்றம். சூதர் சூதாடியது குற்றம்!! என்கின்றனர். மேலும் "இவை உலகத்தவர் கண்களுக்குக் குற்றமாகப் பட்டாலும், அன்பு காரணமாகச் செய்ததால் குற்றமாகா" எனக்கூறி,

அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
அரனடிக்கு அன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே.

என்ற சிவஞான சித்தியாரின் பாடலை மேற்கோள் காட்டி, மேற்கூறிய நாயன்மார்கள் செய்த குற்றமும் குணமாயிற்று எனக் கூறுகின்றனர்.

வான்மீகர் இராமாயணத்தை ஆரம்பிக்கும் போது "உலகத்திலேயே உத்தமனுக விளங்கும் ஒரு பெரியோன் யார்?" என நாரதரைக் கேட்க, நாரதர் "இராமபிரானே உலகத்திற் சிறந்த நல்லோன்" என வான்மீகரிடம் கூறியதாக முதல் சருக்கம் சுமார் நூறு சுலோகங்களில் எழுதுகிறுர். நாரதர் கூறியதை அடிப்படையாகக் கொண்டு இராமாயணம் எழுதினுர் வான்மீகி என்பர் பெரியோர். அதே முறையில் "திருக்கூட்டச் சிறப்பு" என்ற தலைப்பில் சேக்கிழார் பெரு

மான் சுமார் பதினொரு பாடல்களில் சிவனடியார்களான நாயன்மார்களைப் பற்றிக் கூறும் போது,

"பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்"
"கோதிலாத குணப்பெருங் குன்றனுர்" "ஈர அன்பினர்"

என்றெல்லாம் குறிப்பிடுகின்ருர். இப்படிபட்ட அடியார்கள் செய்த காரியங்கள் குற்றமாக இருக்க முடியுமா? குற்றஞ் செய்த பிறகு, குற்றத்தை குணமாக இறைவன் கொள்ளும் காரணம் என்ன? குற்றஞ் செய்வதற்கு முன்னமே செய்யாத வண்ணம் தடுக்க இறைவனுல் முடியாதா?

சமணரைக் கழுவில் ஏற்றிய போது "சிவனடியாரிருந்த மடத்தில் தீ வைத்துத் துன்புறுத்திய இவர்களைத் தண்டிப்பது சரியே"

புகலியில் வந்த ஞானப்புங்கவர் அதனைக் கேட்டும்
இகலிலர் எனினும் சைவர் இருந்து வாழ்மடத்தினில் தீங்கு
தகவிலா சமணர் செய்த தன்மையால் சாலும் என்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்தவேலை.

என ஞானசம்பந்தர் இருந்ததாகக் கூறுகிருர் சேக்கிழார். அது குற்றமாயின், அசரீரியாகவாவது இறைவன் "சமணரை தண்டிக்க வேண்டாம்" எனக் கூறியிருக்கலாமே! எனவே ஞானசம்பந்தர் மீது சாட்டப்படும் குற்றமே யன்று என்று தெளியலாம்.

நாவுக்கரசர் பிறர் மதத்திலிருந்த போது சிவநிந்தனைசெய் திருக்கலாம். சூலைநோய் தந்து இறைவன் அவரை ஆட்கொண் டான். அந்த நிலையிலும் அவர் "பிறசமயத் தொடக் குண்டு வாழ்ந்த இவ்வுடல் எனக்கு வேண்டாம். நான்வாழ வேண்டு மென்ருல் இறைவனே! என் உடலில் சூலம் ரிஷப முத்திரை இடுவாய்"

புன்னெறியாம் அமண் சமயத் தொடக்குண்டு போந்தவுடல்
தன்னுடனே உயிர்வாழத் தரியேன் நான்; தரிப்பதனுக்கு
என்னுடைய நாயக! நின்இலச்சினை இட்டருள் என்று
பன்னுசெழுந் தமிழ்மாலை முன்னின்று பாடுவார்.

அவர் வேண்டியவாறே சிவகணங்களில் ஒன்று தோன்றி அவர் தோளில் சூலம் விடை இலச்சினையிட்டது என்பது

வரலாறு. இப்படித் தடுத்து ஆட்கொண்ட அடியவரான திருநாவுக்கரசரை "வேறு சமயத்தில் இருந்த போது நிந்தனை செய்தார்" என இறைவன் வன்மம் பாராட்டிக் குற்றமாகக் கொண்டான் என எண்ணுவது, இறைவனையே மனிதநிலைக்கு இறக்குவது மாதிரியான சிவாபராதத்தை உண்டாக்கும். எனவே திருநாவுக்கரசர் மீது சாட்டப் பெற்ற இக்குற்றம் சரியாக இல்லை என்று தோன்றுகின்றது.

நாளைப்போவார் திருக்கோயிலுள்ளும் தில்லையிலும் புக முயன்றது குற்றமாயின் பிறகு நாளைப் போவார் வரலாறே கிடையாதே. இறைவன் அவர் குற்றம் செய்திருப்பின் திருப்புன்கூரில் நந்தியை விலகச் செய்தும், தில்லைக் கோயிலுக்குள் வருமாறும் அவரை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டாரே! எனவே நாளைப் போவார் மீதும் குற்றமிருப்பதாகக் கூற முடியவில்லை. திருக்கோயிலுக்குள் நந்தனர் நுழைவது குற்றமென்றால் சாதி வேற்றுமையை ஆதரிப்பது மாதிரி தோன்றுகின்றது.

மூர்க்க நாயனரைக் கற்ற நற்சூதர் என்கின்றார் கற்றவர் நல்லவர் குற்றம் செய்யமாட்டார் என்பதுடன் அவர்சூதாடி அடியவருக்கு அமுதூட்டியது தான் வரலாற்றின் மிகமிக முக்கியமானது. மேலும் இறைவன் இதனை தடுக்காததுடன், அவரை ஏற்றுக் கொண்டார். எனவே அவர் மீது குற்றம் காணமுடியவில்லை.

சாக்கிய நாயனரை நற்சாக்கியன் என்று அடைமொழி கூறுகிறார். மேலும் சாக்கியர் லிங்கத் திருமேனியைக் கல்லால் எறிந்தது பற்றிச் சேக்கிழார் பெருமான்,

> கல்லாலே எறிந்ததுவும்: அன்பான படிகாணில்
> வில்வேடர் செருப்படியும் திருமுடியின் மேவிற்றல்
> நல்லார் மற்றவர் செய்கை அன்பாலே நயந்ததனை
> அல்லாதார் கல்லென்பார்: அரனார்க்கஃ தலராமால்.

எனக் கூறுகின்றார். சிவபெருமான் மலராக ஏற்றுக்கொண்டார் எனப்படுவதால் கல்லெறிந்தார் என்ற குற்றம் சரியாக இல்லை.

திருவானைக்காவில் இறைவன் மீது சருகுகள் உதிரா வண்ணம் காப்பதற்கு சிலந்திவாய் நூலினால் விதானம் கட்டி

யது குற்றமாயின் இறைவன் தடுத்திருக்கலாம். சிலந்தி குற்ற மிழைத்திருந்தால் கோச்செங்கட் சோழனைப் பிறக்குமாறு அருள் கிடைத்திருக்காது. எனவே அதுவும் குற்றமெனக் கொள்ள முடியவில்லை. கண்ணப்பர் தம் செருப்புக் காலைச் சிவபெருமான் திருமுடியில்வைத்ததுபற்றிச்சிவகோசரியாரின் கனவில் தோன்றிய இறைவன் "என் தலையின்மீது திண்ணன் தன் காலை வைக்கும் போது என்மகன் முருகனின் திருவடி பட்ட மாதிரி இன்பம் உண்டாகின்றது. அவன் வாயிலிருந்து உமிழும்நீர் எனக்கு கங்கை நீரைக் காட்டிலும் மேம்பட்டது அவன் எனக்கு அளிக்கும் எச்சில் இறைச்சி வேள்வி செயும் அன்பர் அளிக்கும் அவிர்ப்பாகத்தைக் காட்டிலும் சிறப் புடையது" என்றெல்லாம் கூறியதிலிருந்து, திண்ணனார் குற்றவாளியல்லர் என்பது மட்டுமல்ல அவர் இறைவனைத் தமது சேவையால் களிப்படையச் செய்தார் என்று தீர்மா னிக்க வேண்டுவதாகிறது.

கணம்புல்லர் திருக்கோயிலில் திருவிளக்காகத்தம் தலை மயிரை எரித்தது குற்றமானால் இறைவன் ஏற்றிருக்க மாட் டார். தடுத்திருப்பார்.

> தங்கள் பிரான் திருவுள்ளம் செய்துதலைத் திருவிளக்குப்
> பொங்கிய அன்புடன் எரித்த பொருவில் திருத்தொண்டருக்கு

என்று சேக்கிழார் பெருமான் தலைவிளக்கைத் திருவிளக்கு என்றுகூறி, அதனை ஏற்றுக் கொண்ட சிவபெருமான் "மங்கலமாம் பெருங்கருணை" வைத்தார் என்கிறார். எனவே அதுவும் குற்றமாகத் தெரியவில்லை.

மேற் கூறியவற்றைப் படிக்கும் நம் அன்பர்கள் இந்தப் பரதேசி "சுந்தரமூர்த்தி நாயனாரை" மறுத்து எழுதுகிறானோ என எண்ணிவிடக் கூடாது. அடிப்படையான அப்பெரி யாரை மறுத்தால் "அருள் மொழி அமுது" எழுதவே முடி யாது. உரையாசிரியர் கூறுவதை ஒப்புக்கொள்ள முடியவில்லை என்பதையே காட்டியுள்ளோம். சுந்தரமூர்த்தி நாயனாரின் வாக்கு நிச்சயம் பொய்க்காது. எனவே அவர் குறிப்பிட்டுள்ள அடியார்கள் என்ன குற்றஞ் செய்தார்கள் என்பதை அந்தந்த வரலாறுகளை எழுதும்போது எடுத்துக்காட்ட விரும்புகிறோம் அன்பர்கள் தாமதத்திற்கு மன்னிப்பார்களாக,

செயற்கரிய செய்வர் பெரியர். அதனுல் பெரியபுராணம் எனப்பெயர் வந்தது, என்றெல்லாம் குறிப்பிட்டோம். சிறுத்தொண்டர் மாதிரி பிள்ளைக்கறியமுதூட்டிங், திருநீலகண்டர் மாதிரி தியாகம் செய்தால்தான் அருள்பெற முடியும் என்ருல் நம் போன்ற இக்காலத்து எளியவர் எவ்வாறு நற்கதியடைவது! நமக்குச் சிவனருள் கிட்டாதோ என்று ஏங்கலாம். செயற்கரிய செய்கை என்பதற்குத் திருக்குறள் உரையாசிரியரான பரிமேலழகர், "செயற்கு எளிய ஆவன = மனம் வேண்டியவாறே அதனை பொறிவழிசளாற் புலன்களிற் செலுத்தல்" என்கிருர். மனத்தைக் கட்டுப்படுத்தி ஐம்பொறிகளை அடக்குவது செயற்கரியசெயல் என்பது பெறப்படுகின்றது. புலனடக்கம் போதும், இறைவனை அடைய முடியும் என்பது அறிந்து அவ்வாறே ஒழுகி, இன்றும் இறையருள் பெறலாம் என்று நாம் எண்ணி ஏக்கம் தவிர்ந்து இன்புறலாம், நாயன்மார்கள் அத்துணை பேரும் புலனடக்கியவர்கள் என்பது கண்கூடு.

சேக்கிழார் மரபு தவருத வித்தகக்கவி. ஒரு உதாரணம். "உலகெலாம்" என்று நடராசப் பெருமானை வணங்கி பின்னர் விநாயக வணக்கம் பாடுகிருர். முன்னுல் அல்லவோ விநாயக வணக்கம் பாட வேண்டும் என்று தோன்றுகின்றதல்லவா? திருமுறை ஓதும்போது "திருச்சிற்றம்பலம்" எனக் கூறியே ஓதுதல் வேண்டும் என்ற மரபை அறிவுறுத்தற் பொருட்டுத் "திருச்சிற்றம்பலம்" என்பதற்குப் பதில் "உலகெலாம்" எனத் திருச்சிற்றம்பலவனையே பாடிப், பின்னர் காவியமரபை அறிவுறுத்தற் பொருட்டு விநாயக வணக்கம் பாடினர். எனவே மரபு தவருத மகாகவி பாடும் காவியம் பக்தி என்றஒரே அஸ்திவாரத்தில் ஸ்ரீ பிள்ளை அவர்கள் கூறியவாறு "பக்திச் சுவைநனி சொட்டச் சொட்ட" அமுத தாரையாக வருகிறது காவிய மாளிகையான திருத்தொண்டர் புராணத்தினுள் நுழையுமுன் பக்தியே உருவான பரமனடியர்களைச் சந்திக்குமுன் அவர்கள்மீது நாம் பக்தி கொண்டு "அருள் மொழி அமுதை" அள்ளி அள்ளி உண்டு ஆனந்தமடைய சிவநேசச் செல்வர்களான நாயன்மாரும் அவரைப் பற்றிக் கூறும் சேக்கிழாரும் அவருக்கு அடியெடுத்துக் கொடுத்த "உலகெலாம்" உணர்ந்து ஓதற்கரிய சிவகாமவல்லி சமேத நடராசப் பெருமானும் அருள வேண்டி வணங்குவோமாக.

சேக்கிழார் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்.

உ

முருகன் துணை

திருநெறிய தமிழ்வளர்க்கும் சைவமடா
லயம்சைவம் செழிக்கச் செய்யும்
உருவமுறு திருக்கோயில் காசிமடம்,
என யாரும் உரைக்கும் சீர்த்தி
மருவிடத்தில் அறம் வளர்த்துச் சிவம்வளர்க்கும்
பெரும்பண்பு வாய்த்த தேவே,
குருமடத்தில் அன்புடைமுத் துக்குமர
சாமியென்னும் குணத்தின் குன்றே.

துறவுநெறி தவிராமல் ஒழுக்கம் நிறைந்
திடுசாமி தூயோன் என்றே
உறவுடையார் உறவில்லார் யாவருமே
போற்றுகின்ற ஒருவ, நிற்கென்
மறவரிய அன்பினுல் வணக்கத்தைச் சொல்லயிது
வரைய லானேன்,
அறம்பலவும் செய்கின்ற தனைவிளக்கும்
பத்திரிகை அடைந்த திங்கே.

திருக்கொள்ளம் பூதூரில் ஓடவுற்ச வத்தினிலே
தேவா ரத்தின்
திருக்கிளரும் கோஷ்டிநடை பெறுவதும்;காஞ்
சீபுரத்தில் சீரார் சஷ்டித்
திருவிழாவில் கந்தபுரா ணத்தினது விரிவுரையும்
தெய்வக் கடல்
திருநகரில் அப்புரா ணம்விரிக்கும் உரையதுவும்
திகழ்தல் ஓர்ந்தேன்.

நூல்படித்தல் அனமளித்தல் ஒளிபெறவே
விளக்கமைத்தல், நூலோர்க் கீதல்
சால்புடைய அபிடேக மாதியன
புரிந்திடுதல் தமிழைக் காத்தல்
இயல்புறவே பலநூலும் பதித்தளித்த
லாதியன இயற்றும் நின்றன்
பாலிறைவன் அருளடைதல் வியப்பாமோ
எஞ்ஞான்றும் பரந்து வாழி

அன்புள்ள

கி. வா. ஜகந்நாதன்.

15—10—73

[சிவ சிவ

இறையருள் பெற பனசை புராணம்

புலவர். இந்திராணி அவர்கள்,
W/o. இலக்குமணன்,
புதுப்பேட்டை.

விண்ணும் மண்ணும் அழிவுறினும் எக்காலத்தும் அழியா வண்ணம் ஏட்டிலே பாட்டெடுத்து நாட்டிலே என்றும் நின்று நிலவும்படியாக காலமெனும் தேரினிலே உல்லாச பவனி வரும்படியாக இம்மண்ணுலகில் நிலைபெறச் செய்து புகழினை நிறுத்தி உடலினை மறைத்த பெரும் புலவோர் பலரில் பனசை என்று வழங்கப்படுகின்ற பனப்பாக்கம் என்னும் நல்லூர்தன்னில் பத்திமையிலேச் சிறந்த செங்குந்தர் குலத்திலே மணி விளக்காய் அவதரித்த திருநாராயணன் எல்லப்பன் என்று சொல்லப்படுகின்ற நற்கவிஞர்களால் தொடை. பொருள், சொல் நயமோடு கூடிக் கருத்தூன்றிப் படிப்போர் உள்ளத்தை ஈர்க்கும் தன்மைத்தாய் இப்புவியெங்கும் தம் புகழைப்பரப்ப தன்னுளத்திலே யுன்னி எவரும் மெச்சும்படியாக திருப்பனசைப் புராணம் என்னும் நன்னூலை இப்பூவுலகிற்கு அருளிச் செய்து தம்பூதவுடல் அழிந்தும் அழியாப் புகழுடம்பை நிலைபெறச் செய்தனர்.

"நல்லகுலத்திற் பிறந்து நல்லாரைச் சேர்ந்தொழுகி
நல்லறிவு பெற்றுடைய நன்மாணு – நல்ல
சிவம்வேறே யென்றெண்ணிச் சிந்தை கலங்காதே
சிவமென்ற நீயே சிவம்."

நமக்கு நன்மையெல்லாம் தருகின்றசிவம் வேறு எங்குளதோ என்றெண்ணி நம்முடைய மனதை கலங்க விடாமல் சிவமென்று சொல்லுகின்ற நீயே சிவம் என்று வள்ளலாருடைய அருள் வாக்கின்படி முதலும் முடிவுமிலா இறைவன் அழகிய பனசை நகரின்கண் பெரிய தளியில் மாயூரேசன் என்னும் திருப்பெயர் கொண்டு எழுந்தருளியிருக்கும் வரலாற்றைச் சிறந்த பாக்களின் வழியாக திருப்பனசை புராணம் என்ற பெயருடன் விளங்கும் அந்நூலின் பெருமையைக் கூறத் தக்கதன்று.

கண்ணப்பன் போன்றூற்கு ஆறுநாளில் காணக்கிடைத்த சிவன் அரியும் அயனும் அவரவர்களுக்குரிய ஊழி வரையில் முயன்றும் அறியப்படாதவன் பகுத்தறிவில்லாப் புலியும் மயிலும் மலராலும், நீராலும் பூசித்து வந்தமை கண்டு உள மகிழ்ந்து நற்பேற்றை அப்புலிக்கும் மயிலுக்கும் அளித்தக் கருணைக் கடலாகிய அவ்விறைவன் எழுந்தருளியிருக்கும் தாலமா நகர் நாம் இருக்குமிடமிருந்தே அத்திசை நோக்கிச் சென்னியைத் தாழ்த்தி வணங்கத் தக்கதன்றே

புனுகுப் பூனை அணைந்த மூங்கிற் குழாய் புனுகு மணம் பெறுதல் போல தாலமாநகரின் கண் எழுந்தருளியிருக்கும் மாயூரேசனை மனமொருமித்துப் பூசித்து அவனருளுக்கு ஆட்பட்டோமானுல் வெற்று மூங்கிற் குழாய் புனுகின் மணத்தால் அம்மணத்தைத் தானும் பெறுதல் போல நாமும் வீடாகிய நன்மணத்தைப் பெறலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

"சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்கஞ் சேர்ந்துய்ய
வையத்துளார்க்கு வகுத்துரைத் தானே."

என்று திருமந்திரம் கூறுகின்றது.

சைவ சமயத்திற்குப் பெருமையைத் தரும் ஒப்பற்றத் தலைவனுகிய சிவபரம் பொருள் இப்பூமியில் தோன்றிய மக்கள் அறிந்துய்ய வகுத்துக் கொடுத்த குரு உபதேச மார்க்கம் எதுவெனில் தெய்வச் சிவநெறியாகிய சன்மார்க்கம் ஆகும் அச் சன்மார்க்கத் தலைவனுகிய இறைவன் பனசை நகரின் கண் அருள் வடிவங் கொண்டு உமையம்மையும், தேவர்களும் தொழுது முக்தியைப் பெற வழிவகுத்துக் கொடுத்தார்.

தேவாதி தேவர்களெல்லாம் வணங்கத் தக்க பெருமையுள்ள இறைவனை மானிடப் பிறவிகளாகிய நாம் வணங்குவதற்கு பிறர் நம்மை வற்புறுத்துதல் சாலச் சிறந்ததன்று. உலகினில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு பெயரிட்டு வழங்குவது வழக்கம். அவற்றில் சில பெயருக்கும் பொருளுக்கும் சிறிதும் பொருத்தமில்லாமல் இருக்கும். உதாரணமாக ஒருவன் பெயர் தனகோடி என்று இருக்கும், பெய

ரளவில்தான் தனகோடியே தவிர அவனுக்கும் தனத்திற்கும் கோடிக்கணக்கான மைல் தூரம் இருக்கும். அவன் வறுமைக் கெல்லாம் தலைவனுகத் திகழ்வான். அதுபோல் மெய் என்பது பொய்யானது தான். தோன்றியழியக் கூடியதுதான் ஆனுல் அதை நன்கறிந்தும் மெய் என்று பெயர் கொடுப்பது விந்தை தான். கருப்பாட்டை வெள்ளாடு என்பது போலவும் நச்சுப் பாம்பை நல்லபாம்பு என்று பெயர் கொடுப்பது போலவும் எந்த மங்கல நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தாத அமங்கல நாளாகக் கருதப்படும் செவ்வாய்க் கிழமையை மங்கல வாரம் என்பது போலவும் பொய்யான உடலுக்கு மெய் என்று பெயர் கொடுத்தான். இந்தப் பொய்யான உடல் என்றும் மெய்யாக இருக்கவும், பிறவி என்னும் பெரிய கடலைக் கடக் கவும் இறைவனுடைய திருவடி நிழலே கதியென அடைந் தோர்களே மேலான பதவியை யடைந்து உய்வர் இதையே வள்ளுவப் பெருந்தகை.

> பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவனடி சேராதார்.

என்று கூறியுள்ளார்.

இறைவன் நல்ல அடியாருடைய அன்புக்காக ஏங்கி அவர்களுடைய அவலக் குரல் கேட்குமுன் ஓடிவந்து அருள் செய்யும் தன்மையுடையவன், மனிதனுடைய மனம் ஒரு குரங்கு என்பது போல மனிதன் தன்னுடைய மனதை ஒரு மிக்க இறைவன் பால் சார்த்தி நினைந்து இரங்கும் பக்குவ நிலையை அடைய முடியா விட்டாலும் அந்நிலையை அடைந்த நல்ல அடியார்களின் பக்கலில் இருந்தாலே போதும். அதுவே அவனுக்கு வீடு பேற்றை அளிக்க வழிகாட்டும்.

காசிபன் பெரிய தவமுனிவன். பல்லாண்டுகாலம் பொறி புலன்களை அடக்கி ஆண்டவன் ஆனுலும் மாயை வந்தாள். வசந்த காலமும் வந்தது. தென்றலும் வீசியது. மயங்கினுன் அதன்பயனுக அசுரபலம் பெருகியது. என்று கந்தபுராணம் கூறுகின்றது. ஆகையால் யாரையும் சார்பு விடாது எனவே தான் சார்புணர்ந்து சார்புகெட ஒழுக வேண்டும் என்கிறுர் தெய்வப்புலவர் பனைசை புராணத்தில் மயிலும், புலியும் பூசை

செய்தது அதை வலியுறுத்துகிறது. அடியார்களுடைய நட்பை அடியவர் பெருமானுராகிய இறைவனே நனி விழைகின்ருரெனில் மானிடப் பிறவிகளாகிய நாம் அவ்வடி யாரைச் சார்ந்தது ஒழுகுவதற்குச் சொல்லித் தரலும் வேண்டுமோ.

அடியார் என்ருல் யார்எனக் கேள்வி எழலாம். திருவருள் அனுபவம் உடையவர்களே அடியார்கள். அடி = தாள். ஞானமே வடிவான இறைவனுக்கு தாள்தலை ஏது எனலாம். "அருளது மேனியாகும் அரன் தனக்கு" அவருக்கு அனைத்தும் அருளே ஆகையால் அடியார் அடியையுடைவர் என்ருல் திருவருட் பேறு மிக்கவர்கள் என்பதே பொருள். அத்திரு வருட் பேறு எப்போது வரும் எனின் சிவனுக்கு அடிமை செய்யின் வரும் ஆகவே அடியார் தொண்டு பல புரிந்து அருளைப் பெற்ருேருடன் எப்பொழுதும் பழகவேண்டும். இதையே தான் பொய்யில் புலவரும்.

"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்."

பெரியாரைப் போற்றித் தமக்குச் சுற்றத்தார் ஆக்கிக்கொள்ளுதல் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும் என்று கூறியுள்ளார்.

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பானது நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனல் உடம்பானது நனைந்து நனைந்து அருளமுதே, நன்னிதியே, ஞான நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று மனம் நெகிழ்ந்து உருகும் அடியார்களுடைய அன்பிற்குக் கட்டுப்பட்டு, அருளை மழையாகப் பொழியும் இறைவனைக் கீர்த்தி வாய்ந்த பனைசையம் பதியிலேக் கருணைக் கடலாக எழுந்தருளியிருக்கும் மாயூர நாதரை பனைசை புராணச் சார்பில் வழிபட்டு பக்தியில் சிறந்து விளங்கி முக்தியடைவோமாக என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வாழ்க பனைசையம்பதி! வளர்க அடியவர் பெருமை!

———

பன்னிரு கைகளின் பயன்!

வண்ணை: திரு: ஆ. ஜானகிராமன் அவர்கள்;

-:O:-

விண்ணுலகம் மண்ணுலகம் வீழாமல் மேலோங்க
கண்ணிமைபோல் மன்னுயிரைக் காத்திடும் – எண்ணற்ற
நன்னெறியைக் காட்டியே நாடொப்பச் செய்திடும்
பன்னிருகை வேலைகளைப் பார்.

அருந்தவத்தின் மிக்க அணிதேவர் வேண்ட
இருங்குறையை நீக்க எழுந்தான் – முருகன்
தனிவீடு தந்து தளராவாழ் வீட்டிக்
கனிவுடன்சீர் செய்ததோர் கை.

ஆதவனின் வெப்பம் அவனியோரைத் தாக்க
வேதனையைத் தாங்காது வேண்டவே – ஆதிவேள்
மண்ணிலுள்ள மாத்துயரை மாய்த்தமது மக்களின்
கண்ணீர் துடைத்ததோர் கை.

இருங்கானில் வாழ்ந்தே இரைச்சலோ டோடும்
பெருங்களிற்றின் பேதமையைப் போக்க-நெருங்கிவேல்
மாய்மதநீர் கக்கிப்பின் மால்மருமகன் மேலேறி
காய்தலங்கு சம்பிடித்த கை.

ஈசற் குரவனே இவ்வுலகப் பக்தரெலாம்
பாசமிகக் கொண்டு பணியவே – மாசில்
வரமீந்து வாழ்வில் வளமோங்க நாளும்
கரவாம லீட்டுமோர் கை.

உம்பர்செய் வேள்விக்கு ஊனமே உண்டாக்கித்
தெம்புடன் கொக்கரித்த தெவ்வர்கள் – வெம்பி
குலைநடுங்கிச் சாக குணத்தேவர் வாழ
கலைபரிசை ஏந்தியதோர் கை.

ஊறுவினை வித்தே உவக்கு மசுரர்களை
கூறுபடச் செய்த குமரேசா! – மாறு

தெளியவரைப் பேணி எதிரிகளைத் தாக்க
களிகொண்டு வேல்பிடித்த கை.

எத்திசையு மேத்திடவே எவ்வுயிரு மின்புறவே
புத்தொளியே வீசிப் புகழ்மணக்க — நித்தம்
கடம்பந்தார் பூண்ட கடம்பன் மகிழ
கடவுள்யா னைஅணைத்த கை.

ஏரகத்துக் காவலாய் இன்பத் திருவிளக்காய்
ஊரகத்து ஓங்கிநிற்கும் ஓம்முருகா! — வேறாய்
செயத்தகாச் செய்து செருக்கோ டுழலும்
கயவர்களை மாய்த்ததோர் கை

ஐயத்தால் வாடி அனுதினமும் நோய்கூடி
மெய்வருத்தம் மேலோங்கி மீளாது — ஐயனே!
முன்வினையும் பின்வினையும் மூளும் வினையுடனே
கன்மவினை நீக்கிடுமோர் கை.

ஒருவிசும்பும் பொய்யா துயிரினமும் சாரும்
இருவுலகம் ஏதுமில்லா தேங்கும் முருகா!
திருக்கண் மலர்ந்து திசையெட்டும் ஓங்க
கருணை மழைபொழியுங் கை.

ஓதும் தமிழின் உயிர்மெய் எழுத்தாகி
தீதில் இலக்கணமாய்த் தேயாது — ஆதிமைந்த
இனியதமிழ் தூங்க எழில்மன்னன் கைவீச
கனிதந் துவந்ததோர் கை.

ஔவை அடிகள் அருணகிரி நக்கீரன்
செவ்வையா யுந்நாமம் செப்பவே — செவ்வேள்
அணிகொடி சேவலும் ஆடும் மயிலும்
கணிசம் மணியடிக்கும் கை.

ஆக்கலழித் தல்காத்த லாழமக லங்கூர்வேல்
நோக்கிமண் விண்ணோர் நோயகற்றித் — தூக்கியே
சிரகமு மீட்டிச் சிறப்பளிக்கும் வேலவனின்
ஈறாறு கையேநல் லீகை.

முற்றும்

"உமையாள் பயந்த இலஞ்சியம்"

திரு: சிவ ஞானசம்பந்தம் அவர்கள்;
தூத்துக்குடி–2

"சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே.

என்று அருணகிரிநாத சுவாமிகள் பாடிப் பரவுகின்ற நீலச் சிகண்டி ஏறும் கோலக்குமரப் பெருமானின் திருப்புகழை இக்கட்டுரையில் சிந்திப்போம்.

மெய்த்தவத்தோர் துணையாம் சிவபரஞ்சுடரும் கலவமா மயிலாரியல் கன்னியாம் உமையம்மையும் பெற்றெடுத்த இலஞ்சியம் நம் செந்திற் கந்தப்பெருமான். அப்பெருமானை வாயால் வாழ்த்தி, நெஞ்சினுல் நினைந்து, சென்னி தாழ்த்தி மாமலர் தூவி நாளும் வழிபடும் அடியார்கள் அக்குமரனுக்கு அன்பர்கள், குறவிதோள் மணந்த செல்வக்குமரவேளின் ஆறு திருப்பதி கண்டு, அப்பிரானது ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தையை தமது உறைவிடமாகக் கொண்டவர் அவர். நமது உடலில் அமைந்துள்ள ஆறு ஆதாரங்களைப்போல அமைந்துள்ள ஆறு திருப்பதிகளும் 'ஆறுபடை வீடுகள்' எனப்படுகின்றன.

திருப்பரங்குன்றில் தெய்வயானைப் பிராட்டியுடன் உல்லாசமாக விளங்குகிறுர். திருச்செந்திலில் பகையசுரர் சேனை வென்றும், அடியாரது காமகுரோத லோபமோகமத மாற்சரிய முதலான அறுபகை கடிந்தும் சேனுபதியாக விளங்கித்தோன்றுகிறுர். திருவாவினன்குடியில் ஞானதண்டாயுதபாணியாகக் காட்சியளிக்கிறுர், திருவேரகத்தில் ஈசருடன் ஞானமொழி பேசியருள்கிறுர், திருத்தணியில் 'வள்ளிவனைத்தோள் முதல் வனுக' விளங்குகிறுர். பழமுதிர்சோலையில் அன்னையரிருவரோடும் கூடி ஆறுமுகத்து அண்ணல் அருள் வழங்குகிறுர். இவ்வாறு ஆறுதிருப்பதிகங்களிலும் அழகுற விளங்கும்' அண்ணலின் திருமுகங்கள் ஆறினை நோக்குவோம்,

சிவந்த செஞ் சதங்கையும் சிலம்பும் தண்டையும் புனைந்துள்ள திருச்செந்திற்பதிக் கந்தப் பெருமானின் அறுமுகங்களும் அன்பு, அருள், வீரம், கல்வி, புகழ், ஈகை என்னும் ஆறு பண்புகளையும் சுட்டுகின்றன. ஒரு திருமுகம் உலகிற்கு ஒளிபெருக்குகிறது. ஒரு திருமுகம் தன் மணித்திருவடிகளில் அன்போடு அணைந்தோர் மகிழ வரம் பலவும் வழங்குகிறது. ஒரு திருமுகம் 'ஒருங்கிய மணத்தோடு இருபிறப்போர்ந்து முப்பொழுது குறைமுடித்து நான்மறையோதி ஆறங்க முதலெழுத்து ஓதி அந்தணர் வளர்க்கும் ஐவகை வேள்விகட்கும் இடையூறு நேரா வண்ணம் பாதுகாக்கிறது; ஒரு திருமுகம் துனியில் காட்சி முனிவரர்க்கு நான்மறைப் பொருளை நயம்பட நவில்கிறது; ஒரு திருமுகம் வெவ்வசுரர் போற்றும் வெஞ்சூரனைத் தடிந்து, வீரமும் பெருமிதமும் பொலிய விளங்குகிறது: மற்றும் ஓர் திருமுகம் அன்னையரிருவர்க்கும் மோகமளிக்கிறது;

இத்தகைய முகம் ஆறுடை முருகப்பிரானின் பன்னிரு திருக்கரங்களில் பொலியும் படைகளைப் பற்றி இனி நோக்குவோம். வீரர்கட்கு எல்லாம் வீரனாக விளங்கும் குமரப்பெருமானது பன்னிரு படைகளும் உருத்திரர் பதினொருவரும் அருட்சத்தியுமாகிய பன்னிருவரைக் குறிப்பன என்பர் ஆன்றோர். தோமரம், துவசம், வாள், வச்சிராயுதம், ஈட்டி, கோதண்டம், கணை, அங்குசம், கண்டை, கமலம், பரசு, வேல் எனப்படும் அப்பன்னிரு படைக்கலங்களையும் இறைவன் தரித்தமை, அவனது கருணையின் பெருமையை விளக்குவனவேயன்றி, மற்றன்று. தோமரம் சுத்த தத்துவங்களைப் படைக்கும் ஆற்றலையும். துவசமாகிய வெற்றிக்கொடி 'காரணத்துள் ஐந்தொழிலும் ஓவாது அளிக்கின்ற ஆற்றலையும் குறிக்கின்றன. ஞானச்சுடர்வாள் உயிர்களது பிறப்பறுக்கும் பெற்றிமையையும், கோதண்டமும் கணையும் உயிர்களின் மூல மலம் ஒழித்தலையும் காட்டுகின்றன, வச்சிராயுதம் ஈட்டியும் ஒருவராலும் வெல்லப்படாத மேன்மையையும் கண்டை பரநாதத்தை நடத்தும் பண்பையும், கமலம் உலகினைத் தோற்றி ஒடுக்கும் உரனையும், பரசு அடியாரிடர்களையும் இயல்

பிணையும் சுட்டி நிற்கின்றன. அங்குசம் மாயாகுணங்களை இயக்குகிறது. ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணிய தன்மை யுடைய வேல்-'' செஞ்சுடர்வேல் ''என்றும்'' அவுணர்உரத்து உதிரக்குளத்திற் குதித்துக் குனித்துக் களித்துக் குடித்து வெற்றிக்களத்திற் செருக்கிக் கழுதாடும் வேல்'' எனவும் அருணகிரியார் போற்றுகின்ற வேல்—அஞ்ஞானத்தை அழித்து ஞானவாரியை வழங்கும் வரையிலா மாட்சிமையைக் காட்டு கிறது.

இனி, இப்பெருமானது அருள்நிறைந்த திருநாமங்களுள் தலைசிறந்த, மேன்மைமிக்க, திருநாமமாகிய ''சரவணபவத்'' திருநாமத்தை உன்னுவாம்.

குறைவிலா நிறைவாய், கோதிலா அமுதாய், ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றாய், மறையுமாய், மறையின் பொருளு மாய் அடியார் மனத்தில் நிலைபெற்ற அருள்வேந்தன் குமரப் பெருமான். பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் இப்பெம் மானுக்கு 'சரவணபவ' என்னும் திருநாமம் உகந்ததாம். 'சரவணபவன்' என்னும் இச்சொல் நாணற்புற்கள் செறிந்து சூழ்ந்த பொய்கையில் தோன்றிய அறுமுகன் எனப்பொருள் படும். சிவபிரானின் ஐந்து திருமுகங்களோடு அதோ முகமுஞ் சேர்ந்து முருகனுக்கு ஆறு திருமுகங்களாயினாற் போல சிவ பிரானின் திருவைந்தெழுத்தே பிரணவத்துடன் சேர்ந்து முருகன் விரும்பும் 'சரவணபவ' எனும் தாரகப்பிரமமாகிய ஆறெழுத்து மந்திரம் ஆயிற்று. ச-மங்களம்; ர-ஒளி, கொடை; வ-சாத்துவிகம்; ண-போர், வீரம், பவன்—உதித் தவன் என இவ்வாறு பொருள் கொள்ளுங்கால், மங்களம், ஒளி, கொடை, சாத்துவிகம், வீரம் என்னும் சிறந்த இயல்புக ளோடு தோன்றியருளிய வன் – சரவணபவன் என்பது தெளி வாகும்.

மறைகளின் முடிவால், வாக்கால், மனத்தினால் அளக் கொணாமல் நிறைவுடன் யாண்டும் தோன்றி நின்றிடும் நிமல மூர்த்தியாம் அறுமுகப் பரம் பொருள் மெஞ்ஞானம் தரும் அட்டாங்க யோகத் தவத்தின் பயனாக, முத்திக்கரசாக, சிவா னந்த முதலாக, ஞானமணி விளக்கமாக விளங்குகிறார்.

ஒளிவார நிறைந்த அம்முத்தி மன்னன், அன்பர்களிதயத்துள் விளங்கும் இன்ப மலையினையும், இன்பவெள்ளம் என்னும் ஆற்றையும், ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின் மேல் அளியில் விளைந்த ஆனந்தத் தேன் பெருக்கும் திருநாட்டையும், இவ்வுலக இன்ப துன்பங் கடந்து போக்கு வரவற்ற உயர்ந்த அழகிய திருநகரினையும் உடைய பேரருளாளன் ஆவான். அப்பெருமான் ஆதிநாடு அந்தமின்றி எங்கும் நிறைந்து ஐந்தெழுத்தைக் கூறி நடத்தும் குதிரையினையும், மும்மலங் காய்ந்த சிவஞான யானையினையும் தனது உயர்ந்த வாகனங்களாக ஏற்றவன். தொழுதெழுகின்ற அடியாரது அன்பு நாரில் தொடுத்த அணியார் அலங்கலையும், பெருமை மிக்க கொடியினையும், பருமிக்க நாதப் பறையினையும், எங்கும் யாண்டும் நீக்கமின்றி நிறைந்த அருளாட்சியினையும் பெற்றவன் அவ்விறைவன்.

இங்ஙனம் எண்ணுந்தோறும் எண்ணி உணருந்தோறும் இன்பம் நல்குகின்ற செந்திற்கந்தப் பெருந்தகையை அன்பால் அணைந்து 'அயரா அன்பின் அவனடி' அணைந்த அடியார்கள் அருணகிரிநாதர், கச்சியப்பர், குமரகுருபரர், சிவப்பிரகாசர், பகழிக்கூத்தர், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள், பாம்பன்ஸ்ரீ குமரகுருதாச சுவாமிகள் எனப்பலர். "மணியடி பொன்னடி மாண்பாம் அடி மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல அடி" என்றும் "அரும்பித்த செஞ்ஞாயிறு ஏய்க்கும் அடி அழகெழுதலாக அருட்சேவடி" என்றும் அன்பர்கள் பாடி வழிபடும் செந்தில்மேய வள்ளி மணாளனின் திருவடிகளை நாமும் பற்றி பரமானந்தப் பேறு பெறுவோமாக.

தஞ்சமென வந்துன் சரணடைந்த நாயினேன்
வஞ்சமன நினைவால் வாடினேன் — வஞ்சமனம்
நீக்கித் திருப்போரூர் நின்மலா நின்னடிமை
ஆக்கி எனையாளு வாய். (1)

மெய்யடியார் போல மிகநடிப்பேன் மெய்யடியார்
செய்யடிமைத் தொண்டேதுஞ் செய்திலேன் — பொய்யடியேன்
உன்னுட் கமலபதத்துள் நிறையப் போரூரா
எந்நாட் கிடைக்கும் எனக்கு. (2)

ஈண்டுலகில் உன்னை இணங்கறியா நாயேனை
ஆண்டருள் போரூர் வேல்அரசனே — மாண்டு
பிறவாமல் உன்தன் பதப்பூப் பெருந்தேன்
இறைவா எனக்கருள்நீ இன்று. (3)

— திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள்

மாலோன் மருகனை மன்றுடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே.

— அருணகிரிநாதசுவாமிகள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

தமிழன்பர்களுக்கோர் நற்செய்தி

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடு:

நெடுநாளாக எதிர்பார்த்திருந்த

திருக்குறள் - மணக்குடவர் உரை

புதிய பதிப்பு, உயர்ந்தரக வெள்ளைத்தாளில்

325 பக்கங்கள் கொண்டது

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்

பிரமாதீச வருடம் ஆவணி மூல நன்னுள் வெளியீடு

விலை ரூ. 2

(தபால் கட்டணம் வேறு)

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் பெறுவோருக்கு 20% கழிவு உண்டு.

கிடைக்கும் இடங்கள்:-

1. K. சுப்பிரமணிய பிள்ளை,
நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்.
ஸ்ரீவைகுண்டம் P. O, திருநெல்வேலி மாவட்டம்.

2. தியாகராச விலாசம்,
53 பிள்ளையார் கோவில்தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

3 முதல்வர்,
செந்தமிழ்க் கல்லூரி,
திருப்பனந்தாள், 612504.

தலையெழுத்து

திரு. ஜெ. மகாதேவன் அவர்கள்,
சென்னை-21.

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற மெய் மொழிக்கிணங்க உலகில் எல்லாம் இறைவனின் திருவுளப் படியே நடந்து கொண்டு வருகின்றன ஒருவன் உலகத்தில் இன்ன இன்ன காலங்களில் இன்பத்தையும், துன்பத்தையும் இப்படி இப்படி துய்க்க வேண்டுமென்று இறைவன் அவனைப் படைக்கும் பொழுதே நிச்சயித்து படைக்கின்றான். ஒருவன் முன்பு செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்பவே அவன் வாழ்க்கை அமைகிறது அவன் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவும் ஆண்டவன் விதித்தபடியே நடக்கின்றன ஒவ்வொருவருக்கும் அவர்தம் தகுதிக்குகேற்ப ஆண்டவன் இன்பத்தையும், துன்பத்தையும் துய்ப்பதற்காகத்தருகின்றான். ஆண்டவனால் இவ்வாறு விதிக்கப்பட்டதையே 'விதி' என் கின்றோம். அவ்விதியின் படியே யாவும் நிகழும். 'விதிவழியே மதி செல்லும்' என்ற பழமொழி விதியின் வலியை வலியுறுத் தும். விதியே 'ஊழ்' என்றும் கூறப்படும்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்."

என்பார் திருவள்ளுவர், ஊழைக் காட்டிலும் வலிமையுள்ளது வேறொன்றுமில்லை; இவ்வுண்மையை மறந்து, வேறொன்றை ஆதாரமாகப் பற்றி எங்கு சென்றாலும், அங்கெல்லாம் 'ஊழ்' தொடர்ந்து வந்து,முன்தோன்றித் தன் வலிமையைக் காட்டி நிற்கும் என்பதே இக்குறளின் பொருள்.

என்னைப்போன்ற சாமன்யர்கள் ஊழினை 'தலைஎழுத்து' என்று சலிப்புடன் கூறிவிமர்சனம் செய்வர். இன்பம் வந் துற்ற போது, அதற்கு காரணமான ஊழைப்பற்றி நாம்

சிறிதும் சிந்திப்பதில்லை. ஆனால் துன்பம் வந்துற்ற காலை, அதனைத் 'தலைஎழுத்து' என்று வெறுப்புடன் கூறி நல்லவர் களையும், தெய்வங்களையும் நிந்தித்துப் பேசுகிறோம். என்ன பேதைமை பாருங்கள்! இன்பத்திற்கும், துன்பத்திற்கும் நம் முடைய ஊழ்வினை தான் காரணம் என்று நாம் ஒவ்வொரு வரும் உணர்ந்து கொண்டால், நாட்டில் பூசல்கள் குறைந்து அமைதி நிலவும்.

'விதி', 'ஊழ்' என்று வழங்கப்படும் தலைஎழுத்தை நம் தலையில் எழுதியனுப்புபவன் 'பிரமன்' என்று அழைக்கப்படு கின்றான். அவன் 'சிவம் என்னும் செம்பொருளின்' ஆணைப் படி உயிர்களுக்கு தலைஎழுத்தை விதிப்பதால் அவனுக்கும் 'விதி' என்ற ஒரு பெயரும் ஏற்பட்டது.

''விதிமால் அறியா விமலன் புதல்வா''

என்பது கந்தரனுபூதி. 'இட்டமுடன் என்தலையில் இன்ன படி என்றெழுதிவிட்ட சிவனும் செத்துவிட்டானோ' என்ற ஔவையாரின் கூற்றுப்படி, பிரமன் சிவன் சொற்படியே எழுதுகின்றான் என்பது தெளிவாகிறது எப்படியென்றால், ஒரு செல்வந்தன் ஒருவீடு கட்டினான் என்று வைத்துக்கொள் வோம்; உண்மையில் கொத்தனார்கள் தான் வீடு கட்டினார் களேயொழிய, அச்செல்வந்தன் கட்டவில்லை; கொத்தனார்கள் அவனிடம் கூலிபெற்றுக் கொண்டு, அவன் ஆணைவழியே கட்டிடம் கட்டி தந்தனர்; ஆனால் சொல்வழக்கில் அச்செல் வந்தன் வீடு கட்டினான் என்றே அனைவரும் கூறுவது போலாம்.

இனி, நம்முடைய இன்பத்திற்கும், துன்பத்திற்கும் நம் முடைய தலைஎழுத்தே காரணம் என ஒருவாறு நாம் உணர்ந்து கொண்டோம். தலைஎழுத்து அழிந்து விட்டால் நமக்கு இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை, பேரின்பமே கிட்டும். இதற்காக பெரியோர்கள் பலவாறு முயன்றனர். அதனை அழிப்பது எங்ஙனம்?

'பித்தப்பெருமான் சிவபெருமான் பெரிய பெருமான் தனக்கு, அருமை பிள்ளைப் பெருமான் என்று புலவரெலாம் பேசிக் களிக்கின்ற பெருவாழ்வாகிய' முருகப்பெருமானால்

தான் நம் தலைஎழுத்தை அழிக்கமுடியும். "எழுதாக்குறைக்கு அழுதால் வருமா?" என்ற பழமொழி முருகனடியார்களிடம் செல்லுபடியாகாது. முருகனடியார்களில் தலையானவராகிய அருணகிரிநாத சுவாமிகள், முருகவேளின் திருவருளால் தம் தலைஎழுத்து அழிந்துவிட்டது என்று பரவசமுடன் கூறுகிறார். அவர் கூறுவதைப் பார்ப்போம்.

ஆறுபடை வீடுகளில் இரண்டாவதாய் திகழ்வது 'திருச்சீரலைவாய்' என்று போற்றப்படும் திருச்செந்தூர். நீர்வளமும், நிலவளமும் பெற்று தெய்வப் பொலிவுடன் விளங்குவது அவ்வூர். அவ்வூர் வயல் வெளிகளெல்லாம் நீரால் நிரம்பியிருந்தன அந்நீரில் சேல்மீன்கள் நிறைந்து, அங்குமிங்கும் துள்ளி ஓடித்திரிவதால், வயல்களில் உள்ள பயிர்கள் அழிந்துவிட்டன. என்று இளையோரும் திகழும் செவ்வேட் பரமனின் மீது காதல் கொண்டு, அவன் அணியும் இனிய கடம்பமலர் மாலையை வாங்கித் தாம் அணிந்து மகிழவேண்டும் என்ற ஏக்கத்தினுல் பூங்கொடி போன்ற இளம் பெண்களுடைய மனங்கள் வெதும்பி அழிந்துவிட்டன. அவனுடைய வெற்றி வேலினுல், பரந்த கடலும், சூராதி அவுணர்களும் 'கிரவுஞ்கிரி' என்னும் மலையும் அழிந்து விட்டன(ர்). அதுபோல் 'எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்' அணிந்த கந்தவேளின் திருவடி மலர்கள் அருணகிரிநாதரின் திருமுடி மேல்பட்ட மாத்திரத்தில் நான்முகன் கையெழுத்தாகிய தலைஎழுத்து அழிந்து விட்டதாம்.

எப்படிப்பட்ட பேறு அருணகிரிநாதப்பெருந்தகைக்குக் கிடைத்தது பாருங்கள்! நாமும் அவரைப்போல் 'மொழிசுழற தொழுது, அழுதழுது' முருகவேளின் இணையடிகளைச் சார்ந்திருந்தால், நம்முடைய தலைஎழுத்தும் அழிந்தொழிந்து, நாமும் சிவமாம் நிலையினை எய்திடலாம் இதில் எள்ளளவும் ஐயமில்லை.

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே.

—கந்தரலங்காரம்.

"குமரா, முருகா, குகா!"

திரு: வி. ஜி. சீனிவாசன் அவர்கள்;
மதுரை,

அவர் சிறந்த பக்தர், முருகப் பெருமானிடம் மாறுத அன்பு பூண்டவர். தமிழருமை தெரிந்து, அதனிலே தோய்ந்து பாக்கள் யாக்க வல்ல நல்ல புலவர். அவர் பாடினர் வெண் பாவாக இப்படி:

நின்மாமன் உண்டதுவும் நேர்ந்தவனன் றெய்ததுவும்
நின்மார்பா ரம்தரலும் நின்முன்னேன் – மன்னி
அமர்வா கனமும் அடியார்வாய்ச் சொல்லும்
குமரா முருகா குகா.

பாடல் முருகப் பெருமானை நோக்கி, முன்னிலைப் படுத்தி இசைப்பது போல, அமைந்தது வாகும்.

"முருகப் பெருமானே! உன்மாமனுகிய திருமால் உட் கொண்டதும், அன்று ராமாவதார காலத்திலே குறிபார்த்து அம்பு எய்ததும், உனது ஆகத்திலே புரளும் கடப்ப மலர் மாலை வழங்குவதும், உன் தமையன் கணபதி பொருந்தியிருக் கும் ஊர்தியும், உன்பக்தர்கள் வாய்மொழியும் குமரா, முருகா, குகா", என்பது விளக்கம். ஆனல் மேற்கொண்டு விளக்கம் தேவையே. அதற்குக் 'குமரா முருகா குகா' என்பதை பிரித்து வைத்துக் கொண்டால் விடை காண்பதும் எளிதாகி விடும். எப்படிப் பகுத்துக் கொள்ளலாம்? கு-மரா- முருகு- ஆகு-கா' எனவே பாகம் செய்து கொள்ள வேண்டும்!.

திருமால் உண்டது	—	கு (மண்)
ராமன் எய்தது	—	மரா-மரங்கள் ஏழு
ஆரம் தருவது	—	முருகு (அழகு)
விநாயகர் வாகனம்	—	ஆகு
அடியார் வாய்ச்சொல்	—	கா (காப்பாற்று)

'குமரா, முருகா, குகா!' — தெளிந்து விட்டதல்லவா! வெண்பாவின் ஈற்றடியின் ஒண்மை தெரிகிறதல்லவா?

"கடம்பு மயில் வாகனம்" (2)

அதே புலவர் பெருந்தகை பாடிய மற்றொரு அருமை வெண்பாவின் ஈற்றடிதான் மேலே காண்பது. பாவினையே முழுவதுமாகப் பார்ப்போம்.

சம்பு களமுடியில் தாங்கினவும் வேளூர்த
லும்படர்வேல் ஏந்தியதும் ஓங்குதனம் – செம்பொன்:
கடம்புரையும் வள்ளிநடை கண்டயர்ந்த தும்பூங்
கடம்பு மயில்வா கனம்'

குமரப் பெருமான் கடப்ப மலர் குலவு தோளன். திருமுரு காற்றுப்படை இயம்புவது போல;'உருள்பூந்தண்டார் புரளும் மார்பினன்!' அதிகம் மொழியப் போனால் கடம்பமரமே முருகப் பெருமானின் எழிலுருவம் காட்டி இலங்குவதாகும். அவ்விள அழகன் 'மன்னி அமர் வாகனம்' மயில் இவையெல் லாம் நாம் தொன்று தொட்டுத் தெரிந்து போற்றி வந்த பொருள்களேயாம், ஆனால் இவ் வெண்பாவுக்குப் பொருள் தெரியு முன்னதாகவே 'கடப்பு மயில் வாகனம்' ஆகியவற் றைப் பகுத்துப் பொருள் காண்டல் முறை முறையாகக் காண்போம். ஆம், கடு – அம்பு–மயில்–வாகு – அனம்' எனத் தான்.

சம்பு களத்தில் தாங்கினது	— கடு (நஞ்சு)
சம்பு முடியில் தாங்கினது	— அம்பு (நீர்; கங்கை)
வேள் ஊர்தல்	— மயில்
வேல் ஏந்தியது	— வாகு (தோள்)
வள்ளி நடைகண்டு அயர்ந்தது	— அனம்(அன்னப்பறவை

(சம்பு–சிவபெருமான், வேள்–முருகவேள், பூ–அழகிய)

"அதுவாம் திருப்பரங்குன்றம்" (3)

அதே புலவர் பெருமகனார் பாடியருளிய இன்னொரு வெண்பாவின் ஈற்றடி தானிது, வெண்மைப் பாவினை உண் மையாய்த் தெரிவோம்,

விண்டுமனே யாரழியா மெய்ப் பொருளென் வச்சிரத்தான்
பண்டுசிறை கொய்ததெது பார்ப்பதி சேய் – கொண்ட
முதலாம் படைவீடென் முத்தமிழோய் கேண்மோ
அதுவாம் திருப்பரங்குன்றம்.

இப்பாடல் வினாவிடையென அமைந்தது! 'திருப்பரங்குன்றம்' என்னும் விடைவரல் வேண்டுமெனில் விடுக்கப் பெறும் வினாக்கட்கு நன்கு உத்தரம் சொல்லத் தெரிதல் வேண்டும். மேற்கொண்டு தலத்தின் திருப்பெயரினையும் 'திரு-பரம்-குன்றம்' என மூன்றாகப் பங்கியற்றவும் வேண்டும்.

விண்டுமனே யார்? விடை-திரு (இலக்குமி)
அழியா மெய்ப்பொருள் ஏன்? விடை - பரம்
வச்சிரத்தான் சிறை செய்தது எது? விடை-குன்றம்

முதலாம் படைவீடு ஏன்? விடை– திருப்பரங்குன்றம். (விண்டு-விஷ்ணு; திருமால்; அழியா மெய்ப்பொருள் – சத்திய வஸ்து, நித்திய வஸ்து எனப்பெறும் பரம் பொருள். வச்சரத்தாள்–தேவேந்திரன், சிறை–சிறகு, முதலாம் படைவீடு–திருமுருகாற்றுப் படையிலே முதன் முதலாகக் குறிப்பிடப் பெற்றுச் சிறப்புறுவது)

இவ்வழகிய இனிய பாடல்களை யாத்தளித்த தமிழ்ப் புலவர் யார் தெரியுமா? முகவை மன்னவர் முத்துராமலிங்க சேதுபதியவர்கள்! தமிழ்க் குரிசில் பாஸ்கர சேதுபதியவர்களின் தந்தையார்! முருகப் பெருமானையும் தமிழ் மொழியையும் ஒருங்கே போற்றியவர்.

———

வாதவூர் அடிகள் உழைக்காது வேண்டும் ஊதியம்

சைவப்புலவர்:
வித்துவான், திரு மு. பரசுராமன் அவர்கள்.
செஞ்சி [தெ.ஆ.மா]

முகவுரை:

'ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.' (குறள்–1003)

'முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.' (குறள்–616)

என்பன வள்ளுவம், இவ்வருமைக் குறட் பாக்களால் உழைத்து ஊதியம் ஈட்டி அத்தகைய அறநெறியான் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடுகொடுத்து இசைபெறாத ஆடவர் நிலத்திற்குப் பொறை (பளு) என்னும், அத்தகைய முயற்சியானது, திருவினையாக்கும் என்பதும் அறியலாம். எனவே, உழைத்துப் பெறுவதே ஊதியம் என்னும் அதுவே சிறந்தது என்றும் அறியலாம்.

எனினும், இக்காலத்தில் சிலர், உழைக்காது, குறுக்கு வழியில் பொருள் ஈட்டி அறஞ்செய விரும்பாதே தன் பெயரை வெளிப்படுத்திப் புகழ் பெரிதும் பெறவிரும்பினும் அத்தகைய செயல் 'பொருளல்லவற்றைப் பொருள் என்றுணரும்,' 'நிலையில்லாதவற்றை நிலையென்று உணரும்' தன்மையினைப் போன்றதே; அத்தகையோரின் செல்வமும், புகழும் பொய்மாயச் செல்வமும் புகழும் போன்றதே!

உலகத் தோற்றத்திற்குக் காரணம் இறைவன் உழைப்பே:

ஊழிக் காலத்தில் உலகமனைத்தும் அழிய,பின் இறைவன் உழைப்பு எனும் அருளால் முதலில், முதற்பூதமெனும் வானம் தோன்ற வானத்திலிருந்து இரண்டாம் பூதமெனும் காற்றுத் தோன்ற, காற்றிலிருந்து மூன்றும் பூதமாகிய தீத்

தோன்ற, தீயிலிருந்து நான்காம் பூதமாகிய நீர் தோன்ற, நீரிலிருந்து ஐந்தாம் பூதமாகிய பாரென்னும் உலகம்தோன்றியதை அறியலாம். இம்முறையாகப் பஞ்சபூதங்கள் தோற்றியதைத் தெள்ளிதின் உணர்த்தும் பரிபாடல் மேலும், நீரிலிருந்து உலகத்தைத் திருமால் தன்வராக வடிவத்தால் எடுத்துத் தோற்றுவித்தான் என்னும் பரிபாடல். இதனே, மணிவாசகர் இறைவனின் தன்மையாக, வெளியாகிய வானத்தினிடையே ஓசை என ஒன்ருகியும், வளியாகிய காற்றினிடையே ஓசை, ஊறு என இரண்டாகியும், தீயினிடையே ஓசை, ஊறு, ஒளி என மூன்ருகியும், நீரினிடையே ஓசை, ஊறு, ஒளி, சுவை என நான்காகியும், பாராகிய உலகத்தினிடையே ஓசை,ஊறு,ஒளி, சுவை நாற்றம்என ஐந்தாகியும் விளங்கியுள்ளான் என்பதை,

'பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்ருய் விளேந்தாய் போற்றி'

எனப் போற்றித் திருவகவலில் போற்றியுள்ளமை அறியலாம் இங்ஙனமுள்ள பஞ்ச பூதங்களின் அடையாளமும், நிறமும் சிவஞான சித்தியார் நன்குணர்த்தும், (சூ-2. செ 67)காண்க; எனவே எல்லா உயிர்களும் வாழத் தோன்றிய உலகமே இறைவனருளாகிய உழைப்பால் தோற்றுவிக்கப் பெற்றது. எனவே அங்ஙனம் தோற்றுவித்த உலகத்தில் வாழும் உயிர்களும் உழைக்க வேண்டுமென்பதே நியதி. அன்றியும் உலகம் படைத்த இறைவன் அருளாகிய உழைப்பு, எல்லா உயிர்களேயும் உழைக்க வேண்டு மென்பதையும் உணர்த்துகிறது. இன்னும் குறிப்பாக மனம் என்னும் அறிவோடு ஆறறிவு படைத்த மனிதர்கள் உழைக்க வேண்டும்; உழைத்தே ஊதியம் பெறவேண்டும். என்பதைத் தெள்ளிதின் உணர்த்துவதை அறியலாம்.

உழைப்பு என்பது யாது?

உழைப்பு என்பது மனிதஉள்ளத்தில் எழும் எழுச்சியும், அதனுல் செயும் செயலுமே யாம். உள்ளம், மனம் என்பன ஒருபொருள் குறிப்பன. மனத்தின்கண் உள்ளி எழும் எழுச்

சியே பின் செயலாகின்றதால் அங்ஙனம் உள்ளும் இடத்திற்கு உள்ளம் எனப் பெயராயிற்று. எனவே எழுச்சிக்கும், செயலுக்கும் தொடர்பு உண்டு என்பதை அறியலாம். மேலும் மனதின்கண் உள்ளி எழும் எழுச்சியே முயற்சியாய் செயல்பட நேர்வதால் முயற்சியும் உள்ளமென்ற பெயரால் அழைக்கலாம். உழைப்பே பொருளை உருவாக்கிப் பயன்படுத்தச் செய்வது, இதனை, 'உழைப்பிற் கேற்ற ஊதியம்,' 'உழைப்பின் வாரா உறுதிகள்உளவோ,' என்னும்சொற்றொடர்களால் தெளியலாம். இங்ஙனமே, மேற்கூறியவாறு இறைவனின் ஆணைவழி நடக்கும் காற்றைக் கனலை நீரை மண்ணைக் கொண்டு மனிதன் இயற்கையைப் பயன்படுத்திக் கொள்ளும் முறையே உழைப்பு எனப்படுவது, இயற்கை என்பது என்ன? பொருட்குப் பின்தோன்ருது உடன்தோன்றி நிகழும் தன்மை என்பர் சொல்லதிகாரத்தில் சேனவரையர். எனவே, மனிதன் இயற்கையை, தன்செயலாகிய. பொருட்டுப் பின் தோன்றித் தோன்றுங்கால் தோன்றிப்பின் அழியுங்கால் அழியும் தன்மையவாகிய செயற்கையால் பயன் படுத்துவதே உழைப்பு. எனவே, மனிதன் தன்தேவைகளை இயற்கையிலிருந்து பெறும் முயற்சியே உழைப்பாகும்.

———

(தொடரும்)

இராமேசுவரத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு நிதி—ரூ. 5,000/-

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 20- ஆவது அதிபராக 26-3-1944 முதல் 18-5-1972 வரை திகழ்ந்தவர்களும், இராமேசுவரத்தில் மிகுந்த பற்று உடையவர்களாய் ஆண்டு தோறும் பல நாட்கள் இராமேசுவர வாசம் செய்தருளியவர்களும், சிவசிவ நாமம் உலகெலாம் சூழ்க என்று பல திருக்கோயில்களில் சிவசிவ ஒளிவளர் விளக்குகளை அமைத்தருளியவர்களும், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதற்கிணங்கக் காசி, காஞ்சி, சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர், மதுரை, சுசீந்திரம், இராமேசுவரம் முதலிய பல தலங்களில் நாடோறும் அன்னம்பாலிப்புக்களை நடத்துவதற்கு நிலையான நிதிகளை ஏற்படுத்தருளியவர்களும் ஆன ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ காசியில் சுத்தாத்வைத சைவ சித்தாந்த பரமுத்தி அடைந்த நாளாகிய வைகாசி **வளர்பிறைச் சஷ்டியில்**, இராமேசுவரத்தில் காசிமடத்தில் அந்தணர் அருந்தவர் ஏழைகட்கு அன்னம் பாலிப்பு நடத்துவித்தற் பொருட்டு இம் முதற் பொருள் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21- ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ **காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் 26- ஆவது தருமமாக நிறுவப் பெற்றது.

இது இராமேசுவரத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் அன்னம்பாலிப்பு 'நிதி' எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5,000/-/ ரூபா ஐந்தாயிரம்/. இது ஆண்டுஒன்றுக்கு 7-3/4% வட்டி தரக்கூடிய நீண்டகால முதலீடாகக் கும்பகோணம் ஸ்டேட்பாங்கில் 61 மாதங்களுக்கு முதலீடு செய்யப் பெற்றுள்ளது. பிக்சட் டெபாசிட் என். ை. 560190 தேதி 2-7-1973. ரூ 5 000/- இது நம்மாலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீ காசி மடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்.

3. இம்முதற் பொருளினின்றுஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகையில் இத்தருமத்தைப் பரிபாலனம் செய்

வதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சிய தொகையில் ரூ. 150/- மட்டும் ஆண்டுதோறும் இராமேசுவரத்தில், நமக்குச் சொந்தமான காசிமடத்தில், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி சுவாமிகள் அவர்கள் நினைவுநாள் ஆகிய வைகாசி வளர்பிறைச் சஷ்டியில் அந்தணர் அருந்தவர் ஏழைகட்கு அன்னம்பாலிப்பு நடத்துவித்தற் பொருட்டுச் செலவிடப் பெற்று வரும். எஞ்சிய தொகை இராமேசுவரம் நம் காசிமடத்தில் நாடோறும் நடத்தப் பெற்று வரும் நித்திய மகேசுவர பூசைத் தொகையுடன் சேர்த்துச் செலவிடப் பெற்று வரும்.

4 வட்டி வரவிற்கேற்பவும், பொருள்களின் கால விலைக்கேற்பவும் நம்மால் தயாரிக்கப் பெறும் திட்ட ஜாப்தாவின்படி ஷை அன்னம்பாலிப்பு நடத்தப் பெற்று வரும்.

5. இவ் வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் செலவு செய்யப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம் பேரிலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீ காசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற் பொருள் திருப்பிஎளிக்கப் பெற்றதும் அதிக வட்டி வரக்கூடிய நீண்டகால முதலீடுகளிலோ அல்லது அரசியல் கடன்தாள்களிலோ முதலீடு செய்யப் பெற்று வரும்.

Tirupanandal
4—7—1973 } (Sd.) Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at the Tiruvidaimarudur Sub-Registrar's Office on Book-4, Volume 59 in Pages 99 to 100 on 6—7—1973 as document No. 25 of 1973.

[சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நித்திய மாகேசுவர பூசை உதவி நிதி - ரூ. 10,000/-

திருப்பனந்தாளில் ஸ்ரீகாசிமடம் நிறுவப்பெற்ற நாள் முதல் இதுகாறும் ஸ்ரீ காசிமடத்தில் ஸ்ரீ காசிமடத்து அதிபர்களால் வழி வழி நடத்தப்பெற்று வருகிற நித்திய மகேசுவர பூசையைத் தொடர்ந்து நடத்துவித்தற்கு உதவியாக இம் முதற்பொருள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21-ஆவது அதிபர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரன் சுவாமிகள்** அவர்களால் 27-ஆவது தருமமாக நிறுவப் பெற்றது. இது "**திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நித்திய மாகேசுவர பூசை உதவி நிதி**" எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ 10,000/- ரூபா பத்தாயிரம். இது ஆண்டொன்றுக்கு 7-3/4% வட்டி தரக்கூடிய நீண்டகால முதலீடாகக் கும்பகோணம் இந்தியன் பாங்கில் 61 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டொபாசிட் எண். 179757 தேதி; 2-7-1973 ரூ. 5,000/- எண். 179758தேதி 2-7-1973 ரூ 5,000/-ஆக ரூ.10,000/ ரூ, 10.000/-, இது நம்மாலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீ காசி மடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

3, இம்முதற்பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித்தொகையில் இத்தருமத்தைப் பரிபாலனம் செய்வதற்குரிய நிர்வாகச்செலவுகள் போக எஞ்சிய தொகை முழுவதும் நாடோறும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நம்மால் நடத்தப்பெறும் நித்திய மாகேசுவர பூசைச் செலவுத் தொகையுடன் சேர்த்துச் செலவு செய்யப்பெற்றுவரும்.

4. இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் செலவு செய்யப்பெற மாட்டாது.

5. இம்முதற்பொருள் நம் பேரிலும் நமக்குப்பின்வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்துவரும், இம் முதற்பொருள் திருப்பியளிக்கப்பெற்றதும் அதிக வட்டி வரக்

கூடிய நீண்ட கால முதலீடுகளிலோ அல்லது அரசியல் கடன் தாள்களிலோ முதலீடு செய்யப்பெற்று வரும்,

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ணி லாரடி யார்தமை அமுதுசெய் வித்தல்" -சேக்கிழார்.

"தண்டறு சிந்தைத் தபோதனர் தாம்மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது." -திருமூலர்,

Tirupanandal
4—7—1973 } (Sd.)Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at the Tiruvidaimaruthur Sub Registrar's office on 6-7-1973. as document No. 24 of 1973 Book 4 Volume 59 pages 97 to 98.

மூன்றும் திருமுறையின்
முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

52. திருவாலவாய் பண்; கௌசிகம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

சொற்பொருள்: வீடல் ஆல – இறப்பு ஒழிவதற்கு; வாயிலாய் - வழியாக இருப்பவனே!; விழுமியார்கள் - சிறந்த அடியார்கள்; நின்கழல் - நினது திருவடிகளை; பாடு அலால் அவா இலாய் – பாடுதலன்றி வேறொன்றிலும் ஆசை இலாதவராய்; பரவ நின்ற பண்பனே-வணங்கும்படி நின்ற பண்பாளனே!; காடு அல் ஆலவாய் இலாய் - காடாகப் பெருகாமல் தனித்து நின்ற ஆலமரத்தடியை இருப்பிடமாக உடையவனே!; கபாலி கபாலம் ஏந்தியவனே!; நீள் கடிம்மதில் கூடல் ஆல வாயிலாய் - நீண்ட காவலுடைய மதில்கள் கூடப் பெற்ற திருவாலவாய்க் கோயிலை உடையவனே!; குலாயது என்ன கொள்கையே - நீ இங்குத் திருவிளையாடல்களைப் புரிந்தது என்ன கருத்தோ? யாமறியோம்.

ஞானசம்பந்தர், சமணர்களை வாதில் வென்று, பாண்டியனைச் சைவனுக்கி, அவனும் அவன்தேவியும் உடன்வர ஆலவாய்க் கோயில் புக்கு வணங்கும்போது இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தைப் பாடுபவர் தேவராவர்.

—

(தொடரும்)

உ
சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுக

		ரூ.
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3 50
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ...	0 40
3	,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ...	0 20
4	,, மதுரைக் கலம்பகம் ,, ...	0 40
5	,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ...	0 60
6	திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2 70
7	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1 25
8	திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ...	0 50
9	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
10	பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1 00
11	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0 50
12	,, மூலம் ...	0 10
13	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ...	0 15
14	கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ...	0 10
15	கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) ...	0 05
16	மூவர் தேவாரம் அடங்கன்முறை-தலமுறை ...	8 75
17	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	4 25
18	திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	2 75
19	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ...	1 75
20	திருவாசகம் (மூலம்) ...	0 75
21	திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ...	3 50
22	9—ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ...	0 15
23	,, ,, தெளிவுரை ...	1 50
24	திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு ...	2 50
25	பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ...	2 50
26	பெரிய புராணம் மூலம் (அச்சில்) ...	
27	திருத்தொண்டர் புராணசாரம் ...	0 40
28	அம்மையார் அற்புதத் திருவந்தாதி ...	0 25
29	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ...	0 50
30	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
31	பழமொழித் திருமுறை ...	0 25
32	அப்பர்விழா வெளியீடு ...	0 25
33	Hymns and Proverbs ...	0 35
34	திருவாரூர்-திருப்பனுவல்கள் ...	0 10

gistered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

Regd No. M. 5574 குமரகுருபரன்

35	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும்	...	0	30
36	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1	75
37	திருவாசகம் தேனும் கனியும்	...	0	15
38	தேவாரம் பாடும்பயன்	...	0	15
39	காசிக்கலம்பகம் உரை நடை	...	0	15
40	தாழைத் திருமுறை	..	0	15
[illegible]	ஐந்து நீதி நூல்கள்	..	0	10
[illegible]	நவக்கிரகமாண்பு	..	0	25
[illegible]	ஸ்ரீ சைலம்	...	0	10
4	திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள்	...	0	37
45	திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி	...	0	10
46	செந்திலாண்டவன் மகிமை	...	0	15
47	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு)	...	2	00
48	திருக்குறள்-உரைக்கொத்து-பொருட்பால் (2-ம் பதிப்பு)	..	2	75
49	தேவார வைப்புத்தல விளக்கம்	...	0	15
50	திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது)	...	2	00
51	திருக்குறள் மூலம்	...	0	25
52	திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை	..	0	20
53	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	..	0	13
54	முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை)	..	0	60
55	திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும்	..	1	50
56	திருக்குறள்-பொருட்பால் ,,	..	2	50
57	திருக்குறள்-காமத்துப்பால் ,,	..	1	00
	ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும்	...	4	00
58	கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன்	...	1	25
59	திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன்	..	1	00
60	சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3	00
61	அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு)	...	0	50
62	மங்கலம்	..	0	20
63	திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும்	..	0	20
64	கோதனத் திருமுறை	..	0	10
65	தோடுடைய செவியன் கோவண ஆடையன்	...	0	15
66	பண்டார மும்மணிக்கோவை உரை நடை	...	0	15
67	மகேசுவரபூசை	...	0	15
68	கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர்	...	0	10
69	திருவிசைப்பா தேனும் கனியும்	...	0	10

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**
2. **"தியாகராஜ விலாசம்"** 53. பிள்ளையார் கோவில் தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -73.